காலை முரசு

பக்கங்கள்:-25

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | புரட்டாதி 02 | வியாழக்கிழமை | 18.09.2025 | அதிர்வு 048


## நீதிமன்றத்தில் சரணடைந்த சம்பத் மனம்பேரி 7 நாள்கள் பொலிஸ் தடுப்புக் காவலில்



மித்தெனியவில் கண்டுபிடிக்கப்பட்ட ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் 06

# சட்டத்தின் ஆட்சிக்கு சகல தரப்பினரும் அடிபணிய வேண்டும்

## பாதாளக் கும்பலுக்கு முடிவு கட்டுவோம் என்றும் ஜனாதிபதி அநுரகுமார சூளுரை

"ஒரு நிலையான அரசை உருவாக்க, அனைவரும் சட்டத்தின் ஆட்சிக்கு அடிபணிய வேண்டும். அரசியல் கலாசாரத்தின் அழிவு காரணமாக, நமது நாடு ஆயுதமேந்திய குற்றக் கும்பல்களுக்குப் பலியாகியுள்ளது. அவர்கள் இந்த நாட்டில் ஒரு பாதாள அரசை உருவாக்கியுள்ளனர். அவர்களுக்கு அரசியல் அதிகாரத்தினதும், பொலிஸாரினதும் பாதுகாப்புக் கிடைத்தது. இருப்பினும், இந்தப் பாதாள அரசை நாம் நிச்சயமாக முடிவுக்குக் கொண்டு வருவோம்."

- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். 02



# அரச ஊழியர்களை ஏமாற்றிவிட்டது அரசு

## பாடம் புகட்ட சஜித் அழைப்பு

தேசிய மக்கள் சக்தி அரசை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்குப் பெரும் ஆணையைப் பெற்றுத் தந்த அரச ஊழியர்கள், அரசாலேயே தற்போது கைவிடப்பட்டுள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவான உறுப்பினர்களுடனான நேற்றைய 06






ஈழத் தமிழர்களின் வரலாற்றைப் பறைசாற்றும் யாழ்ப்பாண இராசதானி காலத்திற்குரிய தொல்லியல் சின்னமான – நல்லூர், சட்டநாதர் சிவன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள – மந்திரி மனையின் ஒரு பகுதி நேற்றுப் பெய்த கடும் மழையால் உடைந்து விழுந்து சிதிலமாகியிருக்கின்றது. (விவரமான செய்தியும் படங்களும் உள்பக்கத்தில்)

யாழ்ப்பாண இராச்சியத்தின் அடையாளங்களில் எஞ்சியுள்ள சின்னங்களைப் பாதுகாப்பதில் இலங்கை அரசாங்கத்தின் 'தொல்லைத்' திணைக்களத்திற்கு – மன்னிக்கவும் தொல்லியல் திணைக்களத்திற்கு – இருக்கும் சிரத்தையை – அக்கறையை – எடுத்துக் காட்டும் ஒரு சம்பவம் இது.

பல தடவைகள் சுட்டிக்காட்டியும் சிங்கள ஆட்சி அரசு உதாசீனமாக இருந்து, அழிய விடும் தமிழர்களின் மரபுரிமைத் தொன்மையின் அடையாளங்களில் இதுவும் ஒன்று.

தப்பித் தவறி இது ஒரு பௌத்த 06

# சட்டத்தின் ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் கடவத்தை முதல் மீரிகம வரையிலான பகுதியின் நிர்மாணப் பணிகளை நேற்று ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“சில ஆண்டுகளுக்கு முன்பு, நம் நாட்டில் ஒரு பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதை நாங்கள் அறிவோம். இதன் விளைவாக, முழு பொருளாதாரமும் மக்களின் வாழ்க்கையும் வீழ்ச்சியடைந்தது. அத்தகைய பொருளாதார வீழ்ச்சிக்குப் பிறகு, ஒரு நாடு ஒரு தசாப்த காலத்தை இழக்கின்றது. ஒரு தசாப்தத்துக்கும் குறைவான காலத்தில், ஒருவேளை பாதி காலத்துக்குள் அதை மாற்ற எங்கள் அரசு எதிர்பார்க்கின்றது.



இந்தப் பொருளாதார நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் 2025 வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

இழந்த தசாப்தம் ஒரு நீண்டகால நெருக்கடியை உருவாக்குகின்றது. இந்த நெடுஞ்சாலைப் பகுதியை அதற்கு ஓர் உதாரணமாகக்குறிப்பிடலாம்.இந்தப்பொருளாதார வீழ்ச்சியால் ஏற்பட்ட நெருக்கடியின் அளவு மற்றும்திசையை இது போன்ற திட்டங்களில் இருந்து அடையாளம் காணலாம்.

கடந்த ஜனவரி மாதம் நான் சீனாவுக்கு விஜயம் செய்தபோது, சீன உதவியின் கீழ் நமது நாட்டில் செயற்படுத்தப்படும் திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஆதரவளிக்குமாறு சீன ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தேன். அவர் அதில் விசேட கவனம் செலுத்தி, அந்தத் திட்டங்கள் அனைத்தையும் மீண்டும் தொடங்குவதற்குத் தேவையான ஆதரவை வழங்க ஒப்புக்கொண்டார். அதற்காக நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கின்றோம். இந்த நெடுஞ்சாலைப் பகுதிக்கு ஒரு விசேட சலுகைக் கடன் திட்டத்தை வழங்குமாறு நாங்கள் கோரினோம்.

அதற்கமைய டொலர் அடிப்படையில் விசேட கடன் திட்டங்கள் எதுவும் இல்லாததால், அந்தக் கடன் திட்டத்தை யுவானில் வழங்க முடியும் என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, சீன எக்ஸிம் வங்கி 2.5 - 3.5 சதவீத வட்டி விகிதத்தில் இந்தக் கடனை எங்களுக்கு வழங்க விருப்பம் தெரிவித்துள்ளது. அதற்காக நாங்கள் எங்கள் விசேட நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு மீட்டெடுப்பது என்பதை நாம் கவனமாக ஆராய வேண்டும். பொருளாதாரத்தை புத்துயிர் பெறுவது பற்றி ஆராயும் போது, இந்த நெருக்கடி எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

2022 - 2023 பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட சமூக அவலம் தற்செயலாக உருவாக்கப்படவில்லை. அதனுடன் தொடர்புடைய பல முக்கிய காரணிகளும் சிக்கல்களும் உள்ளன. எங்கள் தலைமுறை அந்தப் பொருளாதாரச் சரிவை அனுபவித்தது. மக்கள் வரிசையில் நின்று இறப்பதையும், சமூகக் கட்டமைப்பின் சரிவையும் நாங்கள் அனுபவித்திருக்கின்றோம். அந்தச் சமூக அவலத்தின் சொந்தக்காரர்களாகிவிட்டோம்.

இலங்கையில் மீண்டும் இதுபோன்ற நெருக்கடி ஏற்படாதவாறு இந்த நாட்டைக் கட்டியெழுப்ப நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று மக்களுக்கு உறுதியளிக்கிறேன்.

அதற்காக உட்கட்டமைப்பு அபிவிருத்தி மட்டும் போதுமானதல்ல. கடந்த காலத்தில், உட்கட்டமைப்புஅபிவிருத்திமட்டுமேபொருளாதார வளர்ச்சியை மையமாகக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உட்கட்டமைப்பு என்பது ஒரு பொருளாதாரத்தையும் சமூகத்தையும் நிலைப்படுத்துவதற்கான ஓர் அங்கம் மட்டுமே. இருப்பினும், அந்த அங்கம் மட்டுமே இருந்தால், அது அங்கவீன நிலைமையாகும். எனவே, நமது நாட்டில் அங்கவீனமான அபிவிருத்தி மூலோபாயமே இருந்தது.

நிர்மாணத்துறைகளினால் மட்டுமே ஒரு நாட்டில் பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மை உருவாகாது. அதற்கு, பல பரிமாணங்களில் உள்ள விடயங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனவே, நமது அரசு இந்தப் பொருளாதார ஸ்திரத்தன்மையை பல்வேறு பரிமாணங்களில் உருவாக்குகின்றது. உட்கட்டமைப்பு அதன் ஒரு பகுதியாகும். இது போன்ற பல முக்கியமான பணிகள் உள்ளன. அதன்போது, சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டும். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கருத்தை நாங்கள் நிலைநிறுத்துகின்றோம்.

ஒரு நிலையான அரசை உருவாக்க, அனைவரும் சட்டத்தின் ஆட்சிக்கு அடிபணிய வேண்டும். அரசியல் கலாசாரத்தின் அழிவு காரணமாக, நமது நாடு ஆயுதமேந்திய குற்றக் கும்பல்களுக்குப் பலியாகியுள்ளது. அவர்கள் இந்த நாட்டில் ஒரு பாதாள அரசை உருவாக்கியுள்ளனர். அவர்களுக்கு அரசியல் அதிகாரத்தினதும், பொலிஸாரினதும் பாதுகாப்புக் கிடைத்தது.

இருப்பினும், இந்தப் பாதாள அரசை நாம் நிச்சயமாக முடிவுக்குக் கொண்டுவருவோம். அவ்வாறின்றி, பொருளாதார

தொடர்ச்சி▼



## சட்டத்தின் ஆட்சி...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்புடன் கூடிய ஓர் அரசை, எதிர்காலப் பிள்ளைகளுக்கு உருவாக்க முடியாது.

தற்போது நாம் கைது செய்துள்ள குழு, நம் நாட்டில் நடைபெறும் போதைப் பொருள் வர்த்தகத்தில் சுமார் 50 வீதத்துக்குப் பொறுப்பானவர்கள். அவர்கள் கிட்டத்தட்ட 75 வீத ஆயுதமேந்திய குற்றக் கும்பல்களுடன் தொடர்பு கொண்டுள்ளனர். அவர்கள் நம் நாட்டின் அரசியல் அதிகாரத்துக்குப் பல்வேறு வழிகளில் பணத்தை வழங்கியுள்ளனர். இந்த ஆயுதமேந்திய குற்றக் கும்பல்களை ஒடுக்க நாங்கள் செயற்பட்டு வருகின்றோம்.




மேலும், அரசியல் அதிகாரம் முழுவதும் பரவியுள்ள இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடி ஆகியவை அபிவிருத்திக்கு பெரும் தடையாக உள்ளன. இது சமூக உறுதியற்ற தன்மையை உருவாக்கியுள்ளது. ஆனால், பொதுமக்களின் பணத்தில் ஒரு ரூபா கூடத் திருடாத, வீணாக்காத ஒரு அரசியல் அதிகாரத்தை இப்போது நாம் உருவாக்கியுள்ளோம்.

சில இடங்களில் இன்னும் பழைய பழக்கவழக்கங்களில் உள்ள அரச பொறிமுறை மற்றும் தனிநபர்களையும் நாம் அடையாளம் கண்டுள்ளோம். அவர்களுக்குப் புதிய அரசியல் கலாசாரத்துக்கு ஏற்ப தங்களை மாற்றியமைத்துக் கொள்ள வாய்ப்பு உள்ளது என்பதை மீண்டும் மீண்டும் நாம் கூறுகின்றோம். அவர்களால் முடியாவிட்டால், அவர்கள் வெளியேறலாம். அல்லது நாங்கள் அவர்களை வெளியேற்றுவோம். பொதுமக்களின் ஒவ்வொரு ரூபாயையும் பொதுச்சொத்தாக மதித்து அதனைப் பாதுகாக்கும் அரச சேவை நமக்குத் தேவை.

அதற்காக, அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு உள்ளிட்ட வசதிகளை நாம் வழங்கி வருகின்றோம். எமது வரவு – செலவுத் திட்டத்தில் மிகப் பாரிய பகுதியை அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வுக்காக ஒதுக்குகின்றோம். 2026 ஆம் ஆண்டில் மட்டும் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை வழங்குவதற்காக 110 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 2027 ஆம் ஆண்டளவில், இந்தச் சம்பள உயர்வைச் செலுத்துவதற்காக மாத்திரம் 330 பில்லியன் ரூபாய்கள் செலவாகின்றன. இவ்வாறு, அரச சேவையை நவீனமயமாக்க நாம் அரப்பணிப்புடன் செயற்படுகின்றோம்.

இன்று, நாம் ஒவ்வொரு துறையிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளோம். நாம் வரவு – செலவுத் திட்ட ஆவணத்தில் எதிர்பார்க்கப்படும் வரவு – செலவுத் திட்ட பற்றாக்குறையை விட குறைவான வரவு – செலவுத் திட்ட பற்றாக்குறையை இலங்கையில் முதன் முறையாக இந்த வருடம், கண்டு கொள்ள முடியும்.

இலங்கையில் வருமான இலக்குகள் ஒருபோதும் எட்டப்படவில்லை. வரவு – செலவுத் திட்டத்துக்குப் பிறகு ஆண்டு முழுவதும் பல்வேறு குறைநிரப்பு பிரேரணைகள் மூலம் பணத்தை மீண்டும் மீண்டும் ஒதுக்கும் கலாசாரம் இருந்தது. நாம் அவை அனைத்தையும் மாற்றியுள்ளோம். இவ்வாறு ஒரு திட்டத்துடன் பொருளாதார இலக்குகளை முறையாகச் செயற்படுத்தி வருகின்றோம். அதன்படி, தொடர்ச்சியாக சுமார் 5 வீத அளவில் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அடைவதில் இரண்டு ஆண்டுகளை நெருங்கி வருகின்றோம்.

இன்று, நாம் டொலரின் பெறுமதியை குறிப்பிடத்தக்க அளவில் நிலைப்படுத்தியுள்ளோம். இந்த ஆண்டு இறுதிக்குள் டொலர் கையிருப்புக்களை 7 பில்லியன்கள் வரை அதிகரிக்கும் இலக்கை நோக்கி நாம் செயற்பட்டு வருகின்றோம். வங்கி வட்டி விகிதங்களை ஒற்றை இலக்கத்தில் பேண முடிந்துள்ளது. இன்று, வங்கிக் கட்டமைப்பு தனியார் முதலீட்டிற்கு அதிக அளவில் பணத்தை செலுத்தத் தொடங்கியுள்ளது.

மேலும், அரசின் முதல் ஆண்டில் ஒரு பில்லியன் டொலர் நேரடி முதலீட்டை ஈர்க்க முடிந்தது. துறைமுக நகரில் 1.4 பில்லியன் டொலர் மதிப்புள்ள 4 திட்டங்களுக்கு நாங்கள் ஏற்கனவே அனுமதி அளித்துள்ளோம். மேலும் 1.2 பில்லியன் டொலர் மதிப்புள்ள மற்றொரு பாரிய திட்டத்திற்கு 90 வீதம் இணக்கப்பாடு அளிக்கப்பட்டுள்ளதுடன், ஜப்பான் விஜயத்தின்போதுஅந்ததிட்டத்தைநிறைவு செய்தல் குறித்த இலக்கை அடைந்து கொள்ளும் நோக்கத்துடன் நாங்கள் செயற்பட்டு வருகின்றோம்.

இந்த ஆண்டு சுற்றுலாத் துறை, ஏற்றுமதி வருமானம் மற்றும் வெளிநாட்டு வருமானம் ஆகியவற்றில் மிக உயர்ந்த வளர்ச்சியைக் கொண்ட ஆண்டாகவும் இருக்கும்.

இவ்வாறு, வீழ்ச்சி அடைந்த ஒரு அரசு, நிலையான அடித்தளத்துடன் கூடிய பொருளாதாரமாகக் கட்டியெழுப்பப்படுகின்றது. எனவே, இந்த ஆண்டு இலங்கை வரலாற்றில் பொருளாதாரம், சமூக வாழ்க்கை, அரசியல் கலாசாரம் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகிய அனைத்தும் மிக முக்கியமான திருப்புமுனையை அடைந்த

தொடர்ச்சி▼



## சட்டத்தின் ஆட்சி...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி..)

ஆண்டாக மாறியுள்ளது.

அதன்போது, வீதிக் கட்டமைப்பு மிகவும் முக்கியமானது. பொருளாதார வீழ்ச்சிக்குப் பின்னால் இருந்த ஊழல் காரணமாக, அதிவேக நெடுஞ்சாலையின் ஒரு பகுதியின் பணிகள் தடைப்பட்டன. நாம் இவை அனைத்தையும் நிறைவு செய்கின்றோம்.

மேலும், மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்கப்பட வேண்டும். மக்களுக்குத் தேவையான சேவைகளை செயற்றிறனுடன் வழங்க வேண்டும். மேலும், மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. எனவே, இந்தப் பயணத்தில் நாங்கள் மிகவும் சீராக முன்னேறி வருகின்றோம். வெளியே உள்ள அரசியல் குழப்பங்கள் எங்களுக்கு முக்கியமில்லை.

சீரழிந்த அரசியல் கலாச்சாரத்துக்குப் பதிலாக, சீரான அரசியல் கலாசாரத்தை நாங்கள் உருவாக்கி வருகின்றோம். முன்னேற்றத்தை நோக்கி நகரும் பாதையில், அரசியல் அதிகாரம் மற்றும் பிரஜை இருவரினதும் முன்னேற்றம் மிகவும் முக்கியமானது. எனவே, உலகில் முன்னேறிய நாடாகவும், உலகில் அபிவிருத்தியடைந்த நாடாகவும், இலங்கையை கட்டியெழுப்பும் சவாலை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். ஓர் அரசாக, உங்களுக்கு வழங்கக் கூடிய அனைத்து ஆதரவையும் வழங்குவேன். ஒரு நாள் கூட தாமதிக்காமல் இந்தத் திட்டத்தை முடித்து தேசத்துக்கு வழங்குவதற்கு உங்கள் அனைவரையும் பங்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.” – என்றார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் ஜனித ருவன் கொடிதுவக்கு ஆகியோருடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைக்கான சீனத் தூதுவர் சி சென்ஹொங் உட்பட சீன அரச பிரதிநிதிகள், நிதி அமைச்சு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் உள்ளிட்ட அமைச்சுகளின் அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# மண்டைதீவு மனிதப் புதைகுழி; நீதிமன்றில் வழக்குத் தாக்கல்!

## யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுக்கு அறிக்கை சமர்ப்பிக்க நீதிவான் உத்தரவு



யாழ். மண்டைதீவு மனிதப் புதைகுழி தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று புதன்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1991ஆம் ஆண்டு தீவகத்தை இராணுவம் கைப்பற்றியது. அந்தச் சமயம், மண்டைதீவில் உயிருடன் பிடிபட்ட பொது மக்களில் பலர் இராணுவத்தினராலும் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட துணைக் குழுக்களாலும் கொல்லப்பட்டனர். அவர்களின் சடலங்கள் தேவாலயக் காணியில் உள்ள கிணறு உட்பட 3 கிணறுகளில் போடப்பட்டு மூடப்பட்டன என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பில் விசாரணை நடத்தி அந்தக் கிணறுகளைச் சட்ட ரீதியாக அகழ்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவங்களுக்குக் கண்கண்ட சாட்சியங்கள் மற்றும் மதகுருமார் சிலரும் இணைந்து இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் அகழ்வுப் பணியை முன்னெடுப்பதற்கான வசதிகள் இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்து இந்த வழக்கு யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவிடம் பாரப்படுத்தப்பட்டது.

அத்துடன், மண்டைதீவு மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதற்குப் பொலிஸார் கால அவகாசம் கோரியமையால் வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.







# கெரவலப்பிட்டி மின்னுற்பத்தி நிலையம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைப்பு

கெரவலப்பிட்டி சொபாதனவி தன்னியக்க திரவ வாயு மின்னுற்பத்தி நிலையம் தேசிய கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ஹறிணி அமசூரிய மற்றும் வலுச்சக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜயக்கொடி ஆகியோரின் தலைமையில் இதற்கான நிகழ்வு நேற்று மாலை நடைபெற்றது.

கெரவலப்பிட்டி சொபாதனவி திரவ வாயு மின்னுற்பத்தி நிலையத்தில் 350 மொகாவாட் முழுத்திறன் கொண்ட மின் சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இந்த நிகழ்வில் பிரதமர் ஹறிணி அமசூரிய உரையாற்றுகையில்,

“பிராந்தியத்தில் மிகக் குறைந்த மின் சார விலைகளைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக இலங்கையை மாற்றுவதற்காக, கொள்முதல் மற்றும் விலைமனு செயன்முறையை செயற்படுத்தி, எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தியிலிருந்து சூரிய சக்தி மற்றும் காற்றாலை போன்ற மீள்புதுப்பிக்கத்தக்க சக்திமூலங்களுக்கு மின் உற்பத்தியை மாற்றவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

நாட்டின் அனைத்து மக்களுக்கும் நியாயமான மற்றும் கட்டுப்படியான விலையில் மின்சாரத்தை வழங்குவதன் மூலம் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் உற்பத்தியாளர்களின் பங்களிப்பை அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.” என்றார்.







## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சின்ன மரபுரிமை என்றால் கங்கணம் கட்டி நின்று இதை எப்பாடு பட்டேனும் காபந்து பண்ணியிருப்பார்கள்.

இந்த மந்திரிமனைக் கட்டடத்தைப் பேணிப் பாதுகாத்து, அதன் மூலம் தமிழர்களின் தொல்லியல் வரலாற்றுச் சின்னத்தைப் பேண வேண்டும் என்பதில் இலங்கை அரசின் தொல்லியல் திணைக்களத்தை விடவும் மாவட்ட ஆர்வலர்களுக்கும், மரபுரிமையாளர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் அதிக அக்கறையுண்டு. அதனை விசேடமாக சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்தச் சின்னத்தை பேணிப் பாதுகாக்க போர் முடிந்த காலம் தொட்டு விடாது அதிக சிரத்தை எடுத்து வந்த பலரில் மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானமும் ஒருவர். பல தடவைகள் இது தொடர்பாக அவர் எடுத்த முயற்சிகள் பற்றிய விவரங்கள் அவ்வப்போது ஊடகங்கள் வாயிலாக வெளிவந்தன.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த போது அவர் ஒரு தடவை யாழ்ப்பாணம் வந்த சமயத்தில், இந்த மந்திரிமனை புனரமைப்பு பற்றிய நடவடிக்கை குறித்து பேசுவதற்காக விசேடமாக ஒரு சந்திப்பை ஒழுங்கு பண்ணி ஜனாதிபதியுடன் ஆரச்ய்ந்தார் சி.வி.கே.சிவஞானம். மந்திரிமனை முழுமையாக உடைந்து விழுந்து சிதிலமாக முன்னர் அவசரமாகச் செய்ய வேண்டிய அவசியப் பணி இதுவென ஜனாதிபதி ரணிலுக்குத் தெளிவுபடுத்தினார் சிவஞானம்.

'இதோ உடனடியாக நிதியை ஒதுக்குகிறேன். உடனடியாக வேலை தொடங்கும்!' என்று வாக்குறுதி கொடுத்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஆனால் கடைசியில் மாகாண சபை தேர்தல் சட்டத்துக்கு செய்த வேலையை இந்த விடயத்திலும் வெறுமனே கயிறு கொடுப்பது போல கொடுத்துவிட்டு நகர்ந்து விட்டார் அவர். விடயம் அதற்குப் பிறகு முன்நகரவேயில்லை.

பாவம், சிவஞானம்! தமது வீட்டுக்கு சற்று முன்னால், தாம் சிறு வயதிலிருந்தே பெருமையுடன் பார்த்து மகிழ்ந்த - தமிழர்களின் சுயாட்சிச் சிறப்பை பறைசாற்றி நிற்கும் - பாரம்பரிய வரலாற்று மரபுரிமைத் தொன்மைச் சின்னம் ஒன்று தமது வாழ்நாளில், தமது கண்ணுக்கு முன்னாலேயே சிதிலமாகி அழிந்துபோவதை - தாம் பகீரதப் பிரயத்தன முயற்சி எடுத்தும் அதனைக் காப்பாற்ற முடியாமல் போன இயலாமையை - எண்ணி அவர் மனம் வெதும்புவார் என நினைக்கிறேன்.

நிதி இன்மையால் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை எனத் தொல்லியல் திணைக்களம் இப்போது நொண்டிச் சாட்டுச் சொல்லும் என்பது நிச்சயம். வெறும் வெற்று நிலமாக இருக்கும் யாழ்ப்பாணம் கோட்டையைச் சூழ மக்களுக்குத் தொல்லையை மட்டுமே கொடுக்கும் வகையில் பெரும் பணச் செலவில் அகன்ற அரைக் குத்தி போன்ற - அர்த்தமற்ற - கொங்கிறீற் தூண்களை நாட்டி வருகின்றது அத்திணைக்களம்.

இருந்தபோதும் தமிழர்களின் உண்மையான வரலாற்றைப் பறைசாற்றும் மந்திரிமனையை பராமரிக்க மட்டும் மரபுரிமை மையத்தில் இருந்து பணம் வருகின்றது என்கின்றனர்.

எமது ஊடகவியலாளர் ந.லோகதயாளன் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் சமர்ப்பித்த விண்ணப்பம் ஒன்றிற்கு 2022-09-16 இல் - அதாவது சரியாக மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் - பதிலளித்துள்ள தொல்லியல்த் திணைக்களம், மந்திரிமனையின் ஒரு பகுதியை புனர்நிர்மாணம் செய்வதற்கு யாழ். மரபுரிமை மையத்தில் இருந்து நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனப் பதிலளித்துள்ளது.

இதேபோன்று 'மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள மந்திரிமனையின் முற்பக்கக் கூரைப்பகுதியின் வேலைகள் மிக விரைவாக ஆரம்பிக்கவுள்ளமையால் தற்காலிக கூரை அமைத்து வேலை மேற்கொள்ளப்படவுள்ளது' எனவும் அந்தத் திணைக்களம் எழுத்தில் பதிலளித்துள்ளது.

இவ்வாறு பதிலளிக்கப்பட்டு 3 ஆண்டுகள் கடந்தபோதும் எதுவும் நடக்கவில்லை. தொல்லியல் திணைக்களம் திரும்பி பார்க்காத சின்னம் அழிவடைய அதுவே காரணமாகியது.

தொல்லியல் திணைக்களம் எனபது தொல்லியல் சின்னங்களை பேணிப் பாதுகாக்கத்தான் இங்கு உள்ளது என இனியும் நம்புவதில் அர்த்தமில்லை.

### கைது செய்வதைத் தடுக்கக் கோரும்

# கம்மன்பிலவின் மனு; செப். 24 விசாரணை!



சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், தன்னைக் கைது செய்வதைத் தடுக்க உத்தரவிடக் காரி முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மனுதாரர் சார்பாக நேற்று முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர டி சில்வாவின் கோரிக்கையைப் பரிசீலித்த பின்னர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஒரு அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்தது.

எனினும், உதய கம்மன்பிலவைக் கைது செய்வது குறித்து தற்போது எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு அண்மையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சம்பத் மனம்பேரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரசாயனங்கள் அடங்கிய கொள்கலன் தொடர்பில் சந்தேகிக்கப்படும் சம்பத் மனம்பேரியை 7 நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்த பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் வலஸ்முல்ல நீதிவான் மல்ஷா கொடிதுவக்கு நேற்று புதன்கிழமை அனுமதி வழங்கியுள்ளார்.

இந்தோனேசியாவில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் இந்தோனேசியா பொலிஸாரால் 7 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது கெஹெல்பத்தர பத்மே, கொமாண்டோ சலிந்த மற்றும் பாணந்துறை நிலங்க உள்ளிட்ட 6 பேர் அடங்கிய பாதாள உலகக் கும்பல் கடந்த மாதம் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்டது.

இதையடுத்து கெஹெல்பத்தர பத்மே மற்றும் மற்றும் பாணந்துறை நிலங்க உள்ளிட்ட ஐந்து பேர் கொண்ட பாதாள உலகக் கும்பல் கடந்த மாதம் 31 ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதையடுத்து அவர்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

மித்தெனியவில் உள்ள காணி ஒன்றில் இம்மாதம் 5 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, கெஹெல்பத்தர பத்மேவின் ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் 50 ஆயிரம் கிராம் இரசாயனங்கள் அடங்கிய கொள்கலன் கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சம்பத் மனம்பேரி, நேற்று காலை சட்டத்தரணிகள் ஊடாக வலஸ்முல்லநீதிவான்நீதிமன்றத்தில்சரணடைந்தார்.

அவரை 7 நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## அரச ஊழியர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்திப்பின் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மின்சாரத் துறையை மறுசீரமைப்புச் செய்வதாகக் கூறி, இன்று 23 ஆயிரம் ஊழியர்களை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளனர். மின்சாரத் துறையில் மின்சார உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோகத் துறைகளில் பெரிய அளவிலான மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டு, புதிய போட்டித் தன்மை வாய்ந்த கட்டமைப்பை நோக்கி நகர்வது அவசியம்.

எனினும், இந்த 23 ஆயிரம் தொழிலாளர்களுக்கும் தொழில் பாதுகாப்பையும் சமூகப் பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும். தற்போதைய அரசை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு உதவிய மின்சார சபை ஊழியர்களை இந்த அரசு ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது.

மின்சார சபை ஊழியர்களை வீதிக்குக் கொண்டு வந்து, முந்தைய அரசுகளை அசௌகரியங்களுக்கு ஆளாக்கி, அரச ஊழியர்களின் உதவியுடன் ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசு, இன்று மின்சாரத் துறையில் பணிபுரியும் 23 ஆயிரம்அரசஊழியர்களைமறந்துவிட்டுசெயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மின்சாரத் துறையில் பணி புரியும் ஊழியர்கள் இப்போது தாமாக முன்வந்து ஓய்வுபெறலாம் என்றும் மின்சக்தி அமைச்சர் தெரிவித்தார்.

தற்போதைய கடுவலை நகர சபை தவிசாளர் அப்போது மின்சார சபையின் தொழிற்சங்கத் தலைவராக செயற்பட்டார். மின்சாரத்துறையில் உள்ள ஊழியர்களைத்தவறாகவழிநடத்தி, வீதிக்குஇறங்க வழிவகுத்து, அதன் விளைவாக, கடுவலை தவிசாளரான அவர், தவிசாளர் பதவிக்கு வந்ததன் பிற்பாடு அவரும் மின்சார சபை ஊழியர்களை மறந்து விட்டு, அவர்களை ஆபத்தில் சிக்க வைத்துள்ளார்.

எனவே, மக்களையும், அரச ஊழியர்களையும் ஏமாற்றிய இந்த அரசுக்கு எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் சரியான பாடம் கற்பிக்குமாறு நான் சகலரையும் கேட்டுக்கொள்கின்றேன்." - என்றார்.



# யாழ். பருத்தித்துறை, கற்கோவளம் பகுதியில் சட்டவிரோத செயல்களுக்கு முடிவு கட்டப்படும்

## அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ். பருத்தித்துறை, கற்கோவளம் பகுதியில் இடம்பெறும் மணல் அகழ்வு, வாள்வெட்டு தாக்குதல் மற்றும் அனைத்து சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும் முடிவு கட்டப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உறுதியளித்துள்ளார்.

அமைச்சர் சந்திரசேகர், உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகள் சகிதம் கற்கோவளம் பகுதிக்கு நேற்று சென்றிருந்தார்.

அந்தப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடும் கும்பலால் மீன்வாடிகள் அடித்து நொறுக்கப்பட்டு தீவைக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலும், மீனவர்கள் மீதான வாள்வெட்டு தாக்குதல் பற்றியும் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே இது பற்றி ஆராய்ந்து, உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக அதிகாரிகள் சகிதம் அமைச்சர் அங்கு விரைந்திருந்தார்.

மீனவர்கள் மற்றும் மக்களிடம் கலந்துரையாடி, நடந்தவற்றை கேட்டறிந்து, அவை பற்றி பொலிஸாரிடம் எடுத்துரைத்தார். பொலிஸாரால் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் பற்றியும் அதிகாரிகள் ஊடாகவே மக்களுக்கு அமைச்சர் தெளிவுபடுத்த வைத்தார்.

அத்துடன், சட்டவிரோத போதைப் பொருள் பாவனை மற்றும் வாள்வெட்டு தாக்குதல் சம்பவங்கள் என்பவற்றுக்கு நிச்சயம் முடிவு கட்டப்படும் என அமைச்சர் உறுதியளித்தார்.

பாதிக்கப்பட்ட மீனவர்களிடம் சுகநலம் விசாரித்த அமைச்சர், மீன்வர்களின் வாழ்வாதாரத்துக்கு பாதிப்பு ஏற்பட இடமளிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.









# பருத்தித்துறை மரக்கறி சந்தைக்கு அமைச்சர் சந்திரசேகர் விஜயம்

பருத்தித்துறை மரக்கறி சந்தைக்கு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நேற்று விஜயம் மேற்கொண்ட நிலையில் தமது ஆரவாளர்களுடன் மட்டும் சந்தித்து திரும்பினார் என வியாபாரிகள் தரப்பில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

புதிய மரக்கறி சந்தை தொடர்பில் வியாபாரிகளிடையே கடும் அதிருப்தி நிலவி வருகிறது. நகரின் மத்தியில் உள்ள கட்டத்தின் கீழ் தளத்திற்கு மாற்றுமாறு தொடர்ந்து வியாபாரிகளினால் வலியுறுத்தப்பட்டு வருகிறது. நகர சபை செயலாளரினால் வழங்கப்பட்ட எந்த வாக்குறுதியும் இதுவரை நிறைவேற்றி தரப்படவில்லை எனவும் அவர்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில் புதிய மரக்கறி சந்தையில் மழை வெள்ள நீர் தேங்கி நிற்பதனால் வியாபாரிகள் பாதிக்கப்பட்டு வருகிறனர்.

இவ்வாறான நிலையில் பருத்தித்துறை மரக்கறி சந்தைக்கு விஜயம் செய்த அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வெள்ள பிரச்சினைக்கு நடவடிக்கை எடுப்பதாக கூறி சென்றுள்ளார்.

அமைச்சரின் இந்த விஜயத்தின் போது தங்களை சந்திக்காது அமைச்சரின் கட்சிக்கு ஆதரவான ஒரு சில வியாபாரிகளை மட்டும் சந்தித்துவிட்டு சென்றுவிட்டார்.

அமைச்சர் வரும் போது எங்களது பிரச்சினைகளை நேரில் கதைக்க இருந்தோம். ஆனால் கண்துடைப்பாக சிலரை மட்டும் சந்தித்துவிட்டு சென்றுவிட்டார். அமைச்சராக இருக்கும் அவர் இப்படி செய்யலாமா என அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# ஏழரைக் கோடி ரூபா சொத்துகளை எவ்வாறு ஈட்டினார் விமல் வீரவன்ச?

## வழக்கு விசாரணை ஒக்டோபர் 22 இற்கு ஒத்திவைப்பு



சுமார் 7.5 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துகளை எவ்வாறு ஈட்டினார் என்பதை வெளிப்படுத்தத் தவறிய முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிரான வழக்கின் சாட்சிய விசாரணையை எதிர்வரும் ஒக்ரோபர் 22 ஆம் திகதி எடுக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின்போது பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த விமல் வீரவன்சவும் நீதிமன்றத்தில் முற்பட்டிருந்தார்.

விமல் வீரவன்ச சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சமர்ப்பணங்களை முன்வைத்து, வழக்கு தொடர்பானஆவணங்களை ஆய்வு செய்ய நேரம் தேவைப்படுவதாக நீதிமன்றைக் கோரினார்.

இதைக் கருத்தில் கொண்டு, சாட்சி விசாரணையை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி அழைக்க உத்தரவிடப்பட்டது.

2010 மற்றும் 2014 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அமைச்சராக இருந்தபோது விமல் வீரவன்ச ஈட்டிய சுமார் ஏழரைக் கோடி ரூபாவுக்கும் அதிகமான சொத்துகளை எவ்வாறு உழைத்தார் என்பதை வெளியிடத் தவறியமைக்காக இலஞ்ச, ஊழல் ஆணைக் குழுவால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அபத்த சைக்கிளோட்டம்!

யாழ்ப்பாணம், நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் தியாக தீபத்துக்கு அஞ்சலி செலுத்தச் சென்ற கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை நேற்று மாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தடுத்து நிறுத்திய சம்பவத்திற்கு பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரின் மற்றொரு பிற்போக்குத்தனமான - கண்டிக்கப்பட வேண்டிய - கட்டுமீறிய - நடவடிக்கை இது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஈகம் நிறைந்த தியாகப் போராட்டத்தின் பெருமைகளை தமது அரசியல் பிரசாரத்துக்கான விவகாரமாக்கி, அதில் அரசியல் பிழைப்பு நடத்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இவ்வாறு நடந்து கொள்வதில் ஆச்சரியம் இல்லை.

புலிகளின் தியாகத்தை - வீரம் செறிந்த போராட்டத்தை - தமிழினத்தின் மீதான பற்றுறுதியை - தங்களின் சின்னத்தனமான அரசியலுக்குப் பிரசார ஆயுதமாக பயன்படுத்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், எங்கே அந்த வீர மறவர்களின் போராட்டப் பெருமைகளை பிற அரசியல் கட்சியினர் மற்றும் தரப்பினர் தத்தமது பிரச்சாரத்திற்கு பங்கு போட்டு விடுவார்களோ என்ற வெப்பியாரத்தில் செய்யும் அநாகரிக நடவடிக்கைகளே இவை என்பது எல்லோருக்கும் தெரியும்.

சரியோ, பிழையோ தியாக தீபம் திலீபனை பகிரங்கமாக அஞ்சலித்து, நினைவேந்தல் செய்ய தென்னிலங்கை அரசின் ஒரு பிரதிநிதி நேரில் வருகிறார் என்றால், அவர் தியாகி திலீபனின் போராட்டத்தை அங்கீகரிக்கிறார், அவர் இயங்கிய தளத்தை மதிக்கிறார், அவருடைய செயற்பாட்டை - அருந்தியாகத்தை - போற்றுகிறார் என்பதுதான் அர்த்தம். அதற்கு வாய்ப்பளித்து, அந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்த இடமளிப்பதன் மூலம் தியாகி திலீபனுக்கு பெருமை சேர்க்க கிடைத்த வாய்ப்பை, அந்தப் பெருமகனுடைய ஈகத்தை வைத்து அரசியல் பிழைப்பு நடத்தும் சின்னத்தனமான அரசியல்வாதிகள் குழப்பி இருக்கிறார்கள் என்பதுதான் இப்போது அவர்களின் நடவடிக்கையின் விளக்கம்.

இதை அவர்கள் செய்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இந்தியப் படைகளின் பிரசன்ன சமயத்தில் திலீபன் தன் உயிரை தமிழினத்திற்கு தற்கொடையாக்கிப் பின், அந்தத் தியாகியின் முதலாம் ஆண்டு நினைவுக் காலத்தில், இந்தியப் படையின் பிடியில் முழு யாழ்ப்பாணமும் தீவிரமாக சிக்கியிருந்த சமயத்தில், இந்த நினைவுத் தூபியைத் தன் சொந்தச் செலவில், இப்போது அது உள்ள இடத்தில், முதன் முதலில் அமைத்து, நினைவேந்தலை அங்கு ஆரம்பித்தவர் அப்போது யாழ் மாநகர ஆணையாளராக இருந்த சி.வி.கே.சிவஞானம் அவர்கள். தன் உயிரைப் பேராபத்தில் ஆழ்த்தி, அந்த நெருக்கடி சமயத்தில் அந்தக் கட்டமைப்பை நிர்மாணித்தமைக்காக அடுத்த வாரத்தில் அவர் சுடப்பட்டார். படுகாயம் அடைந்த அவர் ஏதோ ஒரு வகையில் தப்பிப் பிழைத்தார்.

திலீபனின் தூபிக்கும் முன், அதை முதன் முதலில் ஸ்தாபித்த சி.வி.கே.சிவஞானம் அந்த தியாகியின் நினைவு தினத்தில் பேச வந்தபோது, அவரிடமிருந்து மைக்கைப் பிடுங்கிக் கலைத்தவர்கள் இந்த சைக்கிள் தரப்பினர். அவர்கள் நேற்று அப்படி நடந்து கொள்வது ஒன்றும் ஆச்சரியப் படுவதற்கு இல்லை. அது, அவர்களின் வழமையான 'சின்னத்தன' போக்குத்தான்!

திலீபனுக்கு எதிரணியில் நின்று, ஆளும் தரப்போடும், இந்தியப் படைகளோடும் சேர்ந்து ஆயுதம் ஏந்தி போராடி, புலிகளை அழித்தொழிப்பதற்கு கங்கணம் கட்டி செயல்பட்ட தரப்பினரை - பிரகிருதிகளை -தமது அரசியல் லாபத்திற்காக தங்கள் அணியில் சேர்த்து வைத்துக் கொண்டு, 'சந்தர்ப்பவாத அரசியல் பிழைப்பு நடத்தும்' சைக்கிள் தரப்பினரின் நேற்றைய நடவடிக்கை மிக மோசமான - அநாகரிகமான - அவலட்சணமான - நடவடிக்கையன்றி வேறில்லை. பானைகளை மடியில் கட்டிக் கொண்டு சட்டியைப் பார்த்துக் கறுப்பு என்று கூறும் அபத்த நடவடிக்கை இது...!

# அ.தி.மு.க. தலைமைப் பொறுப்பில் பழனிசாமி இருப்பது வெட்கக்கேடு!

## கரூர் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் காட்டம்

"திராவிடம் என்றால் என்னவென்று தெரியாது என்று கூறிய பழனிசாமி, அ.தி.மு.க. தலைமை பொறுப்பில் இருப்பது வெட்கக்கேடு. அ.தி.மு.க. தொடங்கியபோது, தன்னுடைய கொள்கை அண்ணாயிசம் என்றார்கள். அதை பழனிசாமி அடிமையிசம்னு மாற்றி, இப்போது அமித் ஷாவே சரணம் என்று மொத்தமாக சரண்டராகிவிட்டார்."

– இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கடுமையாக விமர்சித்துள்ளார்.

அண்ணா பிறந்தநாள் விழா, பெரியார் பிறந்தநாள் விழா, தி.மு.க. தொடங்கப்பட்ட நாள் விழா என முப்பெரும் விழா நேற்று கரூர் – கோடங்கிப்பட்டியில் நடைபெற்றது. இந்த விழாவில் சிறப்புரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின்,

"தமிழக வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் காவிக் கொள்கையின் அரசியல் முகமாக உள்ள மத்திய பா.ஜ.க. அரசுடன் தொடர்ந்து போராடி வருகிறோம். 2 நாள்களுக்கு முன்பு,எதிர்க்கட்சிதலைவர்பழனிசாமி,அ.தி.மு.க.ஆட்சியைகாப் பாற்றியது பா.ஜ.கதான் என்று உண்மையை பேசியிருக்கிறார்.

தி.மு.க. அரசுக்கு மத்திய பா.ஜ.க. அரசு தொடர்ந்து குடைச்சல் கொடுக்கிறது. அதைப் பார்த்து நாம் முடங்கிடுவோம் என நினைத்தார்கள். தி.மு.க. மிரட்டலுக்கு பயப்படும் கட்சியா? இந்தியாவிலேயே முதல்முறையாக ஆட்சி அதிகாரத்துக்கு வந்த ஒரு மாநிலக் கட்சி தான் தி.மு.க.

75 ஆண்டுகால வரலாறு நமக்கு உள்ளது. அதன் பிறகு தமிழகத்துக்கு வந்த எல்லா கட்சிகளும் தி.மு.கவை அழிப்போம், ஒழிப்போம் என்றார்கள். ஏன் இப்போதும் சிலர் தி.மு.கவுக்கு நாங்கள்தான் மாற்று என்று பேசுகின்றனர். மாற்றம், மாற்றம் என்று சொன்னவர்கள்தான் மாறினார்கள் மறைந்தும் போனார்கள். ஆனால், திமுக மட்டும் மாற வில்லை. தமிழக மக்கள் மனதில் என்றும் மறையவில்லை.

தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது ஏகப்பட்ட நெருக்கடிகளை கடந்து ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி, முதலீடுகளை ஈர்த்து, வேலை வாய்ப்புகளை உருவாக்கி, இந்தியாவிலேயே பொருளாதாரத்தில் இரட்டை இலக்கம் கொண்ட மாநிலமாக உருவாக்கி இருக்கிறோம். இதனால் தான் திராவிட மொடல் அரசை பார்த்தால் சிலருக்கு வயிறு எரிகிறது. வாய்க்கு வந்த அவதூறுகளை அள்ளி வீசுகின்றனர். அவர்களது கண்ணீர் ஆட்டுக்காக ஓநாய் வடிக்கும் கண்ணீர்.



பழனிசாமி ஆட்சி அதிகாரம் இருக்கும்போது எதுவும் செய்யாமல், தமிழக உரிமைகளுக்காக குரல் கொடுக்காமல் அடிமை சாசனம் எழுதிக் கொடுத்தார். இப்போது எதிர்க்கட்சி என்ற மாண்பே இல்லாமல் தரம் தாழ்ந்து என்னை ஒருமையில் பேசுகிறார். ரெய்டுகளிலிருந்து காப்பாற்றிக்கொள்ள அ.தி.மு.கவை அடகு வைத்துவிட்டார்.

திராவிடம் என்றால் என்னவென்று தெரியாது என்று கூறிய பழனிசாமி, அ.தி.மு.க. தலைமை பொறுப்பில் இருப்பது வெட்கக்கேடு. அ.தி.மு.க. தொடங்கியபோது, தன்னுடைய கொள்கை அண்ணாயிசம் என்றார்கள். அதை பழனிசாமி அடிமையிசம் மாற்றி, இப்போது அமித் ஷாவே சரணம் என்று மொத்தமாக சரண்டராகிவிட்டார்.

முழுவதும் நனைந்த பிறகு முக்காடு எதற்கு என்பார்கள். நேற்று டில்லியில் கார் மாறி மாறி முகத்தை மூடிக் கொண்டு போன பழனிசாமியை பார்த்து, காலிலே விழுந்த பிறகு முகத்தை மூட "கர்ச்சீப்" எதற்கு என்றுதான் எல்லோரும் கேட்கிறார்கள்.

மத்திய அரசின் செயல்களை நாம் துணிச்சலுடன் நேருக்கு நேர் எதிர்க்கிறோம். போராடி தலைநிமிர்ந்த தமிழகத்தை ஒரு நாளும் தலைகுனிய விடமாட்டேன். தனிநபர்கள் தோன்றுவார்கள், மறைவார்கள். கட்சிகள் வரும், போகும் ஆனால், தமிழகத்தின் தனிப்பெருமை நிரந்தரமானது. தமிழ் மொழியின் சீரிளமை நிரந்தரமானது. மக்கள் உரிமை காக்கப்பட வேண்டும். இந்த தமிழ் மண்தான் நமக்கு எல்லாவற்றையும் கொடுத்தது. இந்த மண்ணைக் காக்கும் பொறுப்பும், கடமையும் நமக்கு உள்ளது." என்றார்.

# கோவை விமான நிலையத்தில் 'பயணிகள் சேவை விழா'

## நடிகர் ரஜினிகாந்த் பங்கேற்பு



இந்திய விமான நிலைய ஆணையகம் (ஏ.ஏ.ஐ) சார்பில் 'பயணிகள் சேவை திருவிழா' என்ற பெயரில் சிறப்பு நிகழ்ச்சி கோவை விமான நிலையத்தில் நேற்று நடந்தது.

அதிகாலை முதல் விமானங்களில் வந்த பயணிகளை கல்லூரி மாணவ, மாணவிகள் இனிப்பு வழங்கி வரவேற்றனர். தொடர்ந்து விமான நிலைய வளாகத்தில் மரக் கன்றுகள் நடப்பட்டன. மேலும் மருத்துவம் முகாம், கண் பரிசோதனை முகாம் நடந்தது. காளப்பட்டி அரசு பாடசாலை மற்றும் கேந்திர வித்யாலயா பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு விமானத் துறையில் உள்ள வேலை வாய்ப்புகள் குறித்து வல்லுநர்கள் ஆலோசனை வழங்கி கலந்துரையாடினர்.

விமான நிலைய வளாகத்தில் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. காலை முதல் மாலை வரை தொடர்ந்து நடத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் பயணிகள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றன.

முன்னதாக, காலை 11.30 மணியளவில் சென்னையில் இருந்து கோவை வந்த விமானத்தில் நடிகர் ரஜினிகாந்த் வந்தார். அவரை கல்லூரி மாணவ, மாணவிகள் பூங்கொத்து வழங்கி வரவேற்றனர். தொடர்ந்து வளாகத்தில் நடத்த கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்ட நடிகர் ரஜினி அங்கு வைக்கப் பட்டிருந்த பிரதமர் மோடியின் கட் அவுட் முன் நின்று மாணவ, மாணவிகள், விமான நிலைய அதிகாரிகள், ஊழியர்கள், பயணிகள் ஆகியோருடன் புகைப்படம் எடுத்து கொண்டார்.



# காசாவில் உள்ள மக்களை வெளியேறுமாறு உத்தரவு

காசா மீது, இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ள இஸ்ரேல், அங்கு வசிக்கும் மக்களை உடனடியாக வெளியேற வேண்டுமென உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் முதல் காசா முழுவதும், தீவிர வான்வழி மற்றும் தரைவழி தாக்குதல்களை இஸ்ரேல் மேற்கொண்டு வருகிறது.

பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உள்ளிட்ட உயர் அதிகாரிகளின் தூண்டுதலுக்கு அமைய, இஸ்ரேல், காசாவில் இனப்படுகொலை செய்ததாக, ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணையில் தெரிய வந்த நிலையிலேயே, இந்த தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், நேற்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் காசா நகரில் குறைந்தது, 40 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் என காசா சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட குண்டுவீச்சு தாக்குதலில் காசாவில் உள்ள சிறுவர் மருத்துவமனை உட்பட மூன்று மருத்துவமனைகள் குறிவைக்கப்பட்டன என ஹமாஸ் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, பலஸ்தீனிய மக்கள் வெளியேறுவதற்கு மேலும் 48 மணி நேரம் வீதியை திறந்துவிடுவதாக இஸ்ரேல் இராணுவம் நேற்று அறிவித்தது.

# காசாவில் 17 மாடிக் கட்டடங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுள்ளன



காசா பகுதியில் கடந்த இரண்டு வருடங்களாக நடந்து வரும் யுத்தத்தில் இஸ்ரேல் மிகக் கடுமையான தொடர் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

காசா நகரத்தின் மீது தொடர்ந்து குண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசா நகரத்தில் உள்ள 17 அடுக்கு மாடி கட்டடங்கள் தற்போது முற்றிலுமாக அழிக்கப்பட்டுள்ளன.

மேலும் நேற்று முன்தினம் இடம் பெற்ற தாக்குதல்களில் 91 பேர் உயிரிழந்தனர் என குறிப்பிடத்தக்கது.



# புதிய சட்டமூலத்துக்கு எதிராக மாலைதீவில் ஆர்ப்பாட்டம்

கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் மாலைதீவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஊடக ஒழுங்குமுறை சட்டமூலத்துக்கு எதிராக ஊடகவியலாளர்கள் மற்றும் எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட பலர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் பதற்ற நிலை அதிகரித்துள்ளது.

மாலைதீவு ஊடக மற்றும் ஒளிபரப்பு ஒழுங்குமுறை சட்டமூலம், ஊடக சுதந்திரத்தின் மீதான நேரடித் தாக்குதல் என்று விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

முன்மொழியப்பட்ட சட்டம் தற்போதுள்ள ஊடக சபைகளை ஒழித்து, ஜனாதிபதி மற்றும் அவரது நாடாளுமன்ற கூட்டாளிகளுக்கு நேரடியாகப் பதிலளிக்கும் ஒரு புதிய ஆணைக்குழுவை உருவாக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அமைப்பு கடுமையான அபராதங்களை விதிக்கவும், ஊடகப் பதிவுகளை நிறுத்தி வைக்கவும், வலைத்தளங்களைத் தடுக்கவும், நீதிமன்ற உத்தரவுகள் இல்லாமல் ஒளிபரப்புகளை நிறுத்தவும் பெரும் அதிகாரங்களைக் கொண்டிருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்துக்கு எதிராக மாலைதீவு ஊடகவியலாளர்கள் சங்கத்துடன் இணைந்து எதிர்க்கட்சிகள் மற்றும் இளைஞர் குழுக்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.





# மக்கள் வரிசையில் நின்று இறந்த நிலை மீண்டும் ஏற்பட இடமளிக்கவே மாட்டோம்!

## ஜனாதிபதி அநுரகுமார உறுதி

“2022 ஆம் ஆண்டு எரிபொருள் வரிசைகளிலும், எரிவாயு வரிசைகளிலும் மக்கள் இறந்தது போன்ற ஒரு நெருக்கடி மீண்டும் ஏற்பட நாங்கள் இடமளிக்க மாட்டோம்.”

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொலன்னாவை பெற்றோலிய களஞ்சிய வளாகத்தில் ஆறு எண்ணெய்க் களஞ்சிய தாங்கிகளின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் நேற்று உரையாற்றும் போது ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“மக்களின் எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பு அரசுக்கு உள்ளது. தற்போதைய அரசு அந்தப் பொறுப்பை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. எந்தவொரு தொழிற்சங்கமும் அரசு மேற்கொள்ளும் திட்டத்தைத் தடுத்தால், அதன் தொடர்பில் முடிவு எடுக்க நாங்கள் தயங்க மாட்டோம்.

ஒரு நிறுவனம் பழமைவாத மரபுகளுடன் முன்னேற முடியாது. அதேபோல், ஒரு நிறுவனம் மனித உழைப்பை மட்டும் கொண்டு முன்னேறாது. ஒரு நிறுவனம் முன்னேற வேண்டுமென்றால், தொழில்நுட்பமும் அறிவியலும் இணைக்கப்பட வேண்டும். தொழில்நுட்பம் அல்லது அறிவியலுக்கு பயப்படும் எந்த நிறுவனமும் வளர்ச்சியடையாது. தொழில்நுட்பத்துக்குப் பயப்படும் அல்லது புதிதாக ஏதாவது மேற்கொள்ள அஞ்சும் நாடு முன்னேறாது. எனவே, நிறுவனங்களை இயந்திரமயமாக்கலுக்கு உட்படுத்த வேண்டும்.

நிறுவனங்கள் இயந்திரமயமாக்கப்பட்டாலும், நாம் இயந்திரத்தனமானவர்கள் அல்ல. நாம் நெகிழ்ச்சியான மக்கள். எனவே, நிறுவனங்கள் இயந்திரமயமாக்கப்படும்போது ஊழியர்களுக்கு என்ன நடக்கும் என்பதை நாங்கள் நன்கு புரிந்துகொண்டு அதற்கு தீர்வுகளை வழங்குவோம்.

ஓர் அரசு கவிழ்க்கப்படும்போது, ஆளும் கட்சி தொழிற்சங்க உறுப்பினர்கள் புதிதாக தெரிவாகும் அரசின் தொழிற்சங்கத்தில் சேர அழுத்தம் கொடுக்கப்படும் என்பது முன்பிருந்த நிலையாகும். இல்லையெனில், மற்ற தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களுக்கு நிறுவனத்துக்குள் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை.

எண்ணெய் நிறுவன ஊழியர்கள் அரசியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டனர். வரலாற்றில், வாக்குச் சாவடிகளைக் கொள்ளையடிக்க கூட அரச ஊழியர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

கடந்த ஆண்டு, இதுபோன்ற ஓர் அரசியல் கலாச்சாரத்தை நாங்கள் மாற்றினோம். எந்த அரச ஊழியரும் இதனால் துன்புறுத்தப்படவில்லை. நம் நாட்டில் உள்ள பொதுமக்கள் முன்பு போலவே அதே அழிவுகரமான முடிவை எதிர்பார்க்கின்றார்களா? மக்கள் இது போன்ற விடயங்களை எதிர்பார்த்திருந்தால், அவர்கள் எங்களுக்கு வாக்களித்திருக்க மாட்டார்கள். அவர்கள் பழைய ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுத்திருப்பார்கள். அவர்கள் 159

தொடர்ச்சி▼







# மக்கள் வரிசையில் நின்று இறந்த நிலை மீண்டும் ஏற்பட இடமளிக்கவே மாட்டோம்!

## ஜனாதிபதி அநுரகுமார உறுதி

தொடர்ச்சி▲

நாடாளுமன்ற இடங்களை வழங்கியிருக்க மாட்டார்கள். ஆனால், சிலர் மாறத் தயாராக இல்லை. மாற்றத்துக்குத் தயாராகுமாறு நாங்கள் அவர்களை அழைக்கின்றோம். இல்லையெனில், நாங்கள் முடிவுகளை எடுக்கத் தயாராக இருக்கின்றோம். ஏனென்றால் நாங்கள் தோண்டித் தோண்டி பார்த்துப் பார்த்து பணியாற்றுவதில்லை. இந்த முற்போக்கான மாற்றத்தை குறுகிய அரசியல் கோணத்தில் பார்க்க வேண்டாம்.

பதினைந்து இருபது ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனைய நிறுவனத்தின் நவீனமயமாக்கலுக்கு ஈரானியத் தலைவர் வந்து அடிக்கல் நாட்டினார். ஆனால், உரிய காலத்தில் அந்தப் பணி நடைபெறவில்லை. இதன் காரணமாக, மின்சாரக் கட்டணம் கூட மேலதிக சுமையாக மாறியுள்ளது. சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நாங்கள் நவீனமயமாக்கி அதன் திறனை அதிகரித்து வருகின்றோம். மேலும், எண்ணெய் ஆய்வுத் திட்டத்தைத் தொடங்க நிபுணர்கள் மற்றும் விஞ்ஞானிகள் தொண்டர் அடிப்படையில் முன்வந்துள்ளனர்.

தேர்தல் காலங்களில் எண்ணெய் கண்டுபிடிப்புகள் பற்றிய கதைகளை எங்கள் மக்கள் செவிமடுப்பார்கள். முதல் மசகு எண்ணெய் போத்தல் 1970 தேர்தலின் போது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், நாங்கள் நிபுணர்களை நம்பி அவர்களுக்குப் பொறுப்புகளை வழங்கியுள்ளோம். அரசு தேவையான வசதிகளை மட்டுமே வழங்குகின்றது.

இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் 26 ஆயிரம் பேர் ஒரு நிர்வாக அதிகாரத்தால் நிர்வகிக்கப்படுகின்றார்கள். அவ்வாறு இருக்கும்போது, ஒரு பிரச்சினை எழும்போது, உறுதியாக அந்த விடயத்தைக் கண்டறிவது கடினம். நெருக்கடிக்கு உரிமையாளர் இல்லை. இந்த அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே மின்சார சபையைத் தனியார்மயமாக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அது வலுசக்தி இறையாண்மையைப் பாதிக்கும் என்பதை நாங்கள் கண்டோம். அந்தச் சட்டத்தை மாற்றியது ஒரு குற்றமா? மின்சார சபை ஊழியர்கள் சட்டப்படி வேலை செய்தல் அல்லது சுகயீன விடுமுறை எடுப்பது இதனால்தானா? அவர்களுக்கு அடுத்த இரண்டு மாதங்களுக்குள் தெரிவு செய்யப் பாதைகள் உள்ளன.

பிராந்தியத்தில் அதிக மின்சார கட்டணங்களைக் கொண்ட நாடுகளில் இலங்கையும் ஒன்று என்று சிலர் கூறுகிறார்கள். எனவே, ஒரு அலகு மின்சாரத்தின் விலையைக் குறைக்க நாங்கள் செயற்பட்டு வருகின்றோம். கடந்த காலத்தில், புதுப்பிக்கத்தக்க வலுசக்தியில் இருந்து உற்பத்தி செய்யப்படும் ஒரு அலகு மின்சாரத்தின் விலை அதிகமாக இருந்தது.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தவறாகப் பயன்படுத்தப்பட்டது. சில நீர்வீழ்ச்சிகள் அரசியல்வாதிகளின் உதவியுடன் அனுமதிப் பத்திரம் பெற்று விற்கப்பட்டன. இந்த அனுமதிப் பத்திரங்களைப் பெற்ற சிலருக்கு மின்சாரம் பற்றி எந்த அறிவும் இல்லை. நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, வடக்கில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் வழங்கப்பட்டிருந்தது, 8 டொலர் சதங்களுக்கு ஆகும்.

அதே நிலத்தையும், அதே காற்றையும் பயன்படுத்தி ஒரு அலகு மின்சாரத்தை 4 டொலர் சதங்களுக்கு உற்பத்தி செய்யும் நிறுவனத்துக்கு வழங்கினோம். அதாவது ஒரு மின் அலகு உற்பத்திச் செலவை 50 சதவீதம் குறைக்க முடிந்தது. சியம்பலாண்டுவாவில் 100 மெகாவோட் சூரிய மின் உற்பத்தி நிலையத்துக்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இவ்வளவு பாரிய திட்டம் தொடங்கப்படுவது இதுவே முதல் முறை ஆகும். இந்த வர்த்தகர்கள் யாரையும் எங்களுக்

தொடர்ச்சி▼






# மக்கள் வரிசையில் நின்று இறந்த நிலை மீண்டும் ஏற்பட இடமளிக்கவே மாட்டோம்!

## ஜனாதிபதி அநுரகுமார உறுதி

தொடர்ச்சி▲

குத் தெரியாது. அவர்கள் எங்கள் நண்பர்களும் அல்ல. நாட்டுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை நாங்கள் செயற்படுத்த விரும்புகின்றோம்.

கெரவலப்பிட்டி ஒரு டீசல் மின் உற்பத்தி நிலையமாகத்தான் தொடங்கப்பட்டது. ஆனால் அது மின் துறை வல்லுநர்கள் அதை எல் என்ஜி மின் உற்பத்தி நிலையமாக மாற்ற பரிந்துரைத்தனர். அவ்வாறு செய்தால், ஒரு அலகு மின்சாரத்தை 50 சதவீதம் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடியும். ஆனால் 2015 - 2019 அரசின் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே கெரவலப்பிட்டியை எந்த நிறுவனத்துக்கு வழங்குவது என்பதைத் தெரிவு செய்ய முடியாததால் மோதல் எழுந்தது. இதன் விளைவாக, கெரவலப்பிட்டியை இன்று வரை எல் என் ஜி.மின் உற்பத்தி நிலையமாக மாற்ற முடியவில்லை. எனவே, மின்சாரக் கட்டணங்களைக் குறைக்கத் முடியாததால் நுகர்வோர் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

எதிர்காலத்தில், திருகோணமலையில் உள்ள அரசுக்குச் சொந்தமான 24 எரிபொருள் தாங்கிகளை நவீனமயமாக்கி பயன்பாட்டுக்குக் கொண்டுவர திட்டங்கள் உள்ளன. அது குறித்த ஒப்பந்தங்களை சரியான நேரத்தில் தொடங்கி, நிறைவு செய்ய நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

கடந்த 8 மாதங்களில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 18.2 பில்லியன் ரூபா இலாபம் ஈட்டியுள்ளது. இலங்கையில் நுகர்வோருக்கு எரிபொருளை விநியோகிப்பது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மட்டுமல்ல. எனவே, அந்த இலாபத்தை மக்களுக்கு நேரடியாக வழங்க முடியாது. எனவே, கல்வி மற்றும் சுகாதாரம் மூலம் அந்த இலாபத்தை மறைமுகமாக மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அரசு 33 அரச நிறுவனங்களை மூட முடிவு செய்தது. அந்த நிறுவனங்களால் மக்களுக்கு எந்த சேவையும் வழங்கப்படுவதில்லை. அந்த நிறுவனத்துக்குச் சொந்தமான நிலத்தை குத்தகைக்கு வழங்கி அதன் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும் சில நிறுவனங்கள் உள்ளன. இந்த நாட்டுக்கு இதுபோன்ற நிறுவனங்கள் தேவையா?

அரச சேவைக்காக 2027ஆம் ஆண்டு 33 ஆயிரம் கோடி ரூபா சம்பள உயர்வுக்காக ஒதுக்கப்படும். ஆனால், இதுபோன்ற பிரதிபலன்கள் மக்களுக்கு கிடைக்கின்றதா?

இதைப் பற்றி சிந்திக்க வேண்டியது அவசியம். அரச நிறுவனங்களில் விருந்தினர் விடுதிகள் உள்ளன. அவற்றை வணிகப் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்து வருமானம் ஈட்டும் வழியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

சில அரசியல்வாதிகள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் 31 ஆண்டுகளாக அரச வீடுகளில் வசித்து வந்தனர். அவற்றை நாம் மாற்றுகிறோம்.

நாட்டை நாகரிகமானதாக மாற்ற நாம் செயற்பட்டு வருகின்றோம். ஆட்சியாளர்கள் தெய்வீகப்படுத்தப்பட்ட சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டோம். நமக்கு எல்லாம் தெரியாது. அறிவு உள்ள அனைவரும் கதைக்க வேண்டும். நாம் அனைவருக்கும் இடமளித்துள்ளோம். நிபுணர்கள் பேசாமல் இருப்பது அநியாயம் ஆகும்.

எனவே, வல்லுநர்களும் துறைசார் நிபுணர்களும் கதைக்க வேண்டும். அவர்களின் கருத்துக்களை பெற்றுக் கொண்டு இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்தில் நாம் முன்னோக்கிச் செல்வோம். நாங்கள் இரக்க உணர்வு கொண்டவர்கள். எனவே, 2022 ஆம் ஆண்டு எரிபொருள் வரிசைகளிலும் எரிவாயு வரிசைகளிலும் மக்கள் இறந்தது போன்ற ஒரு நெருக்கடி மீண்டும் ஏற்பட நாங்கள் இடமளிக்க மாட்டோம்.” – என்றார்.

வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி, வலுசக்தி அமைச்சின் செயலாளர் கே.டி.எம். உதயங்க ஹேமபால, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலிய சேமிப்பு முனைய நிறுவனத்தின் தலைவர் ஆனந்த ராஜகருணா மற்றும் அமைச்சின் அதிகாரிகள் குழுவினரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.







# மத்தியஸ்த சபைகளை பலப்படுத்த நடவடிக்கை

சமத்த மண்டல எனப்படும், மத்தியஸ்த சபைகளை பலப்படுத்தி, நீதிமன்றங்களில் தேங்கியுள்ள வழக்குகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மத்தியஸ்த சபை தொடர்பில், நடத்தப்பட்ட நிகழ்வொன்றில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அத்துடன், 16 மாவட்டங்களில் காணி பிரச்சினைகளுக்கான விசேட மத்தியஸ்த சபைகளும் நிறுவப்பட்டுள்ளன.

இதேவேளை, நீதிமன்றங்களுக்கு பரிந்துரைக்கப்படும் நிதி சார்ந்த பிரச்சினைகள் தொடர்பான வழக்குகளை குறைப்பதற்கு, விசேட மத்தியஸ்த சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அதன் முதற்கட்டமாக, கொழும்பு, கம்பஹா, அநுராதபுரம், பொலன்னறுவை, கண்டி மற்றும் மொனராகலை ஆகிய ஆறு மாவட்டங்களில் நிதி பிரச்சினை தொடர்பில் விசேட மத்தியஸ்த சபைகள் நிறுவப்பட்டுள்ளன.

இந்த நிலையில், மத்தியஸ்த செயல்முறையை வலுப்படுத்துவதன் ஊடாக, நீதிமன்றங்களில் குவிந்துள்ள, இரண்டு இலட்சம் வழக்குகளை ஒரு வருடத்தில் குறைக்க முடியும் என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

# தொழில் திணைக்களத்தினால் விசேட நடமாடும் சேவைகள்




தனியார் மற்றும் அரச அனுசரணை பெற்ற துறைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு உதவும் வகையில், விசேட நடமாடும் சேவைத் திட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக தொழில் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த நடமாடும் சேவைத்திட்டங்கள் அனைத்து மாவட்ட மற்றும் உதவி தொழில் அலுவலகங்களிலும் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தத் திட்டத்தின் போது, ஊழியர்கள் தங்கள் ஊழியர் சேமலாப நிதிய கணக்கு இருப்பைச் சரிபார்ப்பதற்கும், தேசிய அடையாள அட்டையின் அடிப்படையில் கணக்கு விபரங்களைச் சரிசெய்வதற்கும், உறுப்பினர்களாகப் பதிவு செய்வதற்கும், முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கும், தொழிலாளர் சட்டங்கள் குறித்த ஆலோசனைகளைப் பெறுவதற்கும் முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேவையை பெற வருபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை, “பி” அட்டை (பதிவு செய்யப்பட்டிருந்தால்) மற்றும் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியவர்கள் தங்கள் தொழில்தருநரிடமிருந்து கடிதம் ஆகியவற்றை கொண்டுவர வேண்டும் என தொழில் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.








# அரசுரிமையை அறவிடுவதில் தவறான நடைமுறை; அரசாங்கத்திற்கு பெருந்தொகையான நிதி இழப்பு

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் அரசுரிமையை சரியான முறையில் அறவிடாமையால் அரசாங்கத்திற்கு பெருந்தொகையான நிதி இழப்பு ஏற்பட்டிருப்பது கோப் குழுவில் தெரியவந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர தலைமையில் இடம்பெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக்கூட்டத்தின் போதே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்துக்குச் சொந்தமான புத்தளம், முக்குத்தொடுவாவ தோட்டத்தில் மணல் அகழ்வுக்காக தனியார் நிறுவனத்திற்கு 2023 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 2024 செப்டெம்பர் மாதம் வரையில் அகழ்வு பணிக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தக்காரரினால் 36,531 முதல் 45,561 கியூப் வரையிலான மணல் அகற்றப்பட்டுள்ளபோதிலும், 1,564 கியூப் மணலுக்கு மாத்திரமே அரசுரிமையாக 6 இலட்சத்து 86,464 ரூபாய் செலுத்தப்பட்டிருப்பதாக கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய 12 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான அரசுரிமை இழக்கப்பட்டிருப்பதாக கோப் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், கருங்கல்லை உடைக்கும் போது கல் குவாரிக்கு வழங்கப்பட்டுள்ள வெடிபொருள்களின் அளவை அடிப்படையாகக் கொண்டு குறித்த கல்குவாரிக்கான அரசுரிமை அறவிடப்பட்டதிலும் முறைக்கேடுகள் இடம்பெற்றுள்ளன.

ஆனால், சட்டவிரோதமாக வெடிபொருள்கள் பயன்படுத்தப்படுவதால், அகற்றப்படும் கருங்கல்லின் உண்மையான அளவைக் கணக்கிட முடியாது என குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் மூலம் அரசுக்கு பெரும் வருமான இழப்பு ஏற்படுவதாகவும் கோப் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள கருங்கல் குவாரிகள் மூலம் கருங்கல் பெரிய அளவில் உடைக்கப்பட்டாலும் அரசுக்கு சிறிய அளவு வருமானம் மட்டுமே கிடைப்பதாகவும் கோப் குழுவில் தெரியவந்துள்ளது.










# நல்லூர் மந்திரி மனையின் ஒரு பகுதி நேற்று மழையால் இடிந்து விழுந்தது

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணத்தில் நேற்று ஏற்பட்ட மழை மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக நல்லூர் மந்திரிமனை பகுதியளவில் இடிந்து விழுந்தது.

யாழ்ப்பாணம் – நல்லூர், சட்டநாதர் சிவன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள மந்திரி மனையானது யாழ்ப்பாண இராசதானி காலத்திற்குரிய தொல்லியல் சின்னமாகக் காணப்படுகின்றது.

அது இடிந்து விழும் நிலையில் மிகவும் ஆபத்தான விதத்தில் காணப்படுகின்றது என பல்வேறு சமூக அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த நிலையில் தொல்லியல் திணைக்களம் அதனைப் பாதுகாக்க பாரியளவில் முயற்சிகள் எதனையும் முன்னெடுக்கவில்லை.





மேலும் இரண்டு வருடங்களுக்கு முன்பு மந்திரிமனையினை புனரமைப்பதற்கு தொல்லியல் திணைக்களத்துடன் யாழ்ப்பாண மரபுரிமை இயக்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டபோதும் அதன் காணி உரிமையாளர்கள் ஒத்துழைக்காத காரணத்தினால் புனரமைப்புப் பணிகள் தடைப்பட்டன.

இந்நிலையில் நேற்றுத் திடீரென காற்றுடன் ஏற்பட்ட மழை காரணமாக முற்பகல் 12.30 மணியளவில் நல்லூர் மந்திரிமனையின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது.

ஏனைய இடங்களிலும் பாரிய வெடிப்புகள் உள்ள நிலையில் அவையும் இடிந்து விழக்கூடிய அபாயம் உள்ளது.

இதனையடுத்து தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் குறித்த பகுதியை பார்வையிட்டு அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக ஆராய்ந்தனர்.











# ‘வாழும் கலை’ நிறுவுநர் ரவி சங்கர் குருஜியை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார் ஜீவன்



**(மஸ்கெலியா நிருபர்)**

இந்தியாவிற்குப் பயணம் மேற்கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினரும், இ.தொ.கா. பொதுச்செயலாளருமான ஜீவன் தொண்டமான், வாழும் கலை அமைப்பின் நிறுவுனர் ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர் குருஜியை நேற்று சந்தித்து கலந்துரையாடனார்.

இந்தியாவின் பெங்களூரில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பின் போது உலகம் முழுவதும் நூறுக்கும் மேற்பட்ட நாடுகளில் வாழும் கலை அமைப்பின் நிறுவுனர் ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர் குருஜி அவர்கள் முன்னெடுத்த இளைஞர் முன்னேற்றத் திட்டங்களால் ஈர்க்கப்பட்டு, அதனூடாக இலங்கையில் இளைஞர் சக்தி வளர்ச்சித் திட்டங்களைப் பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டதாக ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த முயற்சிகளுக்கு ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர் குருஜி அவர்கள் அளித்துள்ள ஆதரவுக்கு தான் நன்றியுணர்வு கொள்வதாகவும், குருஜியை சந்தித்தமை குறித்துப் பெருமை கொள்கிறார் எனவும் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.



# மட்டு. வாகனேரியில் புதையல் தோண்டிய அறுருக்கு 3 லட்சம் ரூபா தண்டம் விதிப்பு

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள வாகனேரி காட்டுப் பிரதேசத்தில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 பேரும் குற்றத்தை ஒப்புக் கொண்டமையை அடுத்து ஒருவருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் 3 இலட்சம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு வாழைச்சேனை நீதிவான் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த ஜுலை மாதம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றில் வாகனேரி காட்டுப் பகுதியில் புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்ட தென்பகுதியைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பாட்டனர். அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் நீதிமன்ற பிணையில் வெளிவந்தனர்.

இந்த வழக்கு நேற்று நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டமையை அடுத்து அவர்களுக்கு தலா ஒருவர் 50 ஆயிரம் ரூபா வீதம் 6 பேரும் 3 இலட்சம் ரூபாவை தண்டப்பணமாக செலுத்துமாறும் அதனை செலுத்தாத பட்சத்தில் 3 வருட சிறை தண்டனை எனவும் நீதிவான் தீர்ப்பளித்தார்.

# திரிவைச்சகுளத்தில் தமிழர்களின் காணிகள் அபகரிப்புக் குறித்து ரவிகரன் எம்.பி. கேள்வி



**(விஜயரத்தினம் சரவணன்)**

வவுனியா வடக்கு வெடிவைச்சகல்லு கிராம அலுவலர் பிரிவில் மகாவலி அதிகார சபையின் பிடியிலுள்ள தமிழர்களின் பூர்வீக விவசாயக் காணிகள் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டமை மற்றும் பெரும்பான்மை இனத்தவர்களால் 1,000 ஏக்கர் வரையில் அடர்வனங்கள் அழிக்கப்பட்டமை உள்ளிட்ட விடயங்களுக்கு மகாவலி அதிகாரசபை மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேவேளை தமிழ் மக்களின் பூர்வீக விவசாயக் காணிகள் ஆக்கிரமிக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்கமுடியாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மகாவலி 'எல்' வலய வதிவிடத் திட்ட முகாமையாளருடன் கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு செய்வதாகவும், அக்கலந்துரையாடலின் மூலம் மேற்படி திரிவைச்சகுளத்தின் கீழான தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகள் பெரும்பான்மையினத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டமை மற்றும் அதனை அண்டிய பகுதியில் 1,000 ஏக்கர் வரையில் அடர்வனங்கள் பெரும்பான்மை இனத்தவர்களால் அழிக்கப்பட்ட பிணக்குகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படுமென மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்துள்ளர்.

திரிவைச்சகுளம் விவகாரம் தொடர்பில் மகாவலி அதிகாரசபையினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தலைமையிலான குழுவினருக்குமிடையில் நேற்றுக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன்போதே இவ்விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட வெடிவைச்சகல்லு கிராமசேவகர் பிரிவிலுள்ள திரிவைச்ச குளத்தின் கீழான தமிழர்களின் பூர்வீக வயல்நிலங்கள் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் ஆக்கிரமிக்கப்பட்டு, பெரும்பான்மை இனத்தவர்களுக்கு குத்தகை அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டு, அங்கு பெரும்பான்மை இனத்தவர்கள் தற்போது நெற்பயிற்செய்கை மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை அண்மையில் மேற்பசி திரிவைச்ச குளத்தை அண்டியுள்ள சுமார் 1,000 ஏக்கர் வரையிலான அடர்வனப் பகுதிகள் பெரும்பான்மையினத்தவர்களால் அழிக்கப்பட்டு பாரிய ஆக்கிரமிப்பு முயற்சியொன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அப்பகுதி மக்களின் முறைப்பாட்டிற்கு அமைவாக கடந்த 07.07.2025திகதியன்று அந்த இடங்களுக்கு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரடியாக களவிஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

அதனைத் தொடர்ந்து கடந்த 16.07.2025அன்று மகாவலி அபிவிருத்த அதிகாரசபையின் எல் வலய வதிவிடத் திட்ட முகாமையாளர் அலுவலகத்திற்கு துரைராசா ரவிகரன் தலைமையில் வெடிவச்ச கல்லு கிராமமக்கள் உள்ளிட்ட குழுவினர் நேரடியாகச் சென்று மகாவலி "எல்" வலய வதிவிடத் திட்ட முகாமையாளருடன் கலந்துரையாடல் நடாத்தியிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் பெரும்பான்மை இனத்தவர்கள் பத்துப்பேருக்கு திரிவைச்சகுளம் பகுதியில் கடந்த 2022ஆம் ஆண்டு நெற்செய்கைக்காக மகாவலி அதிகாரசபையால் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகளை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினரால் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு பெரும்பான்மை இனத்தவர்களால் அழிக்கப்பட்ட அடர்வனப் பகுதி தொடர்பில் வனவளத் திணைக்களத்துடன் இணைந்து வழக்குக்குத் தொடரவுள்ளதாகவும் இதன்போது தெரியப்படுத்தப்பட்டது.

எனினும் இதுவரை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இத்தகைய சூழலில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு குத்தகை அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்ட திரிவைச்ச குளத்தின்கீழான வயல் நிலத்திலும், அதனை அண்டியுள்ள சட்டவிரோதமாக அடர் வனப்பகுதி அழிக்கப்பட்ட பகுதியிலும் தற்போது பெரும்போக நெற்செய்க்கான பண்படுத்தல் வேலைகளை பெரும்பான்மை இனத்தவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

இத்தகையசூழலில் ஏற்கனவே கடந்த 16.07.2025அன்று மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்ட உத்தரவாதம் இதுவரை நிறைவேற்றப்படாமை குறித்து கேட்டறிவதற்கு நேற்று மகாவலி அதிகாரசபையின் 'எல்' வலயத் திட்ட முகாமையாளர் காரியாலத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், வவுனியாவடக்கு பிரதேசசபை உறுப்பினர்களான தர்மலிங்கம் தனுசன், துரைராசா தமிழ்செல்வன், நீதிக்கான மக்கள் அமைப்பின் பிரதிநிதி கோசலை, வெடிவைச்சகல்லு கிராமத்தைச்சேர்ந்த மக்கள் உள்ளிட்ட குழுவினர் சென்றிருந்தனர்.

இந்நிலையில் மகாவலி அதிகார சபையின் "எல்" வலய வதிவிட திட்ட முகாமையாளர் அலுவலகத்தில் இல்லாத நிலையில், அலுவலகத்தில் அடுத்த நிலையிலுள்ள அதிகாரியுடன் அந்தக் குழுவினர் கலந்துரையாடினர்.

இதன்போது இதுவரை திரிவைச்ச குளம் வயல் காணிகள் மற்றும், அதனை அண்டிய பகுதியில் இடம்பெற்ற பாரிய சட்டவிரோத காடழிப்பு தொடர்பில் மகாவலி அதிகாரசபை நடவடிக்கை எடுக்காமை குறித்து ரவிகரன் கேள்வி எழுப்பினார்.

இந்தப் பிணக்குத் தொடர்பில் ஆராய்வதற்கு மகாவலி 'எல்' வலய திட்ட முகாமையாளருடன் பிறிதொருநாளில் கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்கு செய்வதாகவும், அத்தகைய கலந்துரையாடல் ஊடாக இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் தெரிவிக்கப்பட்டது.

# தொல்லியல் திணைக்களத்தினரிடம் இருந்து நிலாவரைக் கிணறு பிரதே சபைக்கு வருமாம்

## தீர்மானம் நிறைவேற்றினார் ரஜீவன் எம்.பி.




வலி. கிழக்கு பிரதேச அபிருத்திக்குழு கூட்டம் நேற்று கோப்பாய் பிரதேச செயலகத்தில் கோப்பாய் பிரதேச அபிவிருத்திக்குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஜீவ் ஜெயச்சந்திரமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது வீதி அபிவிருத்தி, தொல்லியல் விடயங்கள், விவசாயம், கல்வி, சுகாதாரம், புனரமைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

கூட்டத்தின் போது வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள சுற்றுலாத் தலமான நிலாவரை கிணறு தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ளமையால் சுற்றுலாத் தலத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது என வலி.கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் சுட்டிக்காட்டினர்.

தொல்லியல் திணைக்களம் கடந்த காலங்களில் நிலாவரை கிணற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்தியதாக தவிசாளர் கூட்டத்தில் சுட்டிக் காட்டினார்.

இதற்குப் பதிலளித்த கூட்டத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், கடந்த அரசாங்கங்கள் போல் அல்லாது நாம் புதிய விடயங்களை மேற்கொள்ளவுள்ளோம், ஆகையால் தொல்பொருள் திணைக்களம் என்ற பழைய விடயங்களை கைவிடுங்கள் என கூறியதை தொடர்ந்து தவிசாளருக்கும் தலைவருக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றது.

இறுதியில் கூட்டத்தின் தலைவர் ஜெயச்சந்திர மூர்த்தி ரஜீவன் தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலாவரைக் கிணற்றைப் பிரதேச சபைக்கு பெற்று தருவதாக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்.

அடுத்த தலைப்பில் இடம்பெற்ற கூட்டத்தின் போது வலிகிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் அதிகளவான விவசாயிகள் காணப்படுவதால் விவசாயப் பொருள்களுக்கு சரியான நிர்ணய விலை கிடைப்பதில்லை என்றும் சந்தைகளில் நியாயமற்ற முறையில் கழிவுகள் வியாபாரிகளாலும் இடைத்தரகர்களாலும் மேற்கொள்ளப்படுகின்றன எனவுன் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த விடயம் விவாதிக்கப்பட்டு கோப்பாய் பகுதியில் மிகப்பெரிய மரக்கறி சந்தை ஒன்ற நிர்மாணிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் அச்சுவேலி பிரதேச மக்களின் கோரிக்கைக்கு அமைவாக அச்சுவேலி பிரதான பஸ் நிலையத்துக்கு அருகில் அம்மாச்சி உணவகம் ஒன்றையும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரன்மூர்த்தி ரஜிவன் தனது நிதி ஒதுக்கீட்டில் அமைத்து தருவார் பிரதேச மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார்.











# துறையூர் மீன் சந்தை பற்றிய சர்ச்சையினால் வேலணை பிரதேச சபை அமர்வில் குழப்பம்!

## மூவர் மன்னிப்புக் கோரியமையை அடுத்து சுமுகத் தீர்வு



துறையூர் மீன் சந்தையை குத்தகைக்கு வழங்குதல் தொடர்பான விவகாரத்தை ஒட்டி, வேலணை பிரதேச சபை அமர்வில் உறுப்பினர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து மோதல் பெரும் களேபரமாக உருவெடுத்ததால் தவிசாளரால் சபையின் அமர்வு 5 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வேலணை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் சபையின் சபா மண்டபத்தில் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது துறையூர் மீன்சந்தை குத்தகை தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், அங்கு இருக்கின்ற தற்காலிக கொட்டகை அகற்றப்பட வேண்டும் என்றும் உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்டது.

அத்துடன் சந்தையில் பிரதேச சபையின் சட்ட வரையறைகளுக்கு ஏற்ப வரியை அறவீடு செய்து, பிரதேசத்தின் வருவாய் அதிகரிப்புக்கு இடமளிக்கப்பட வேண்டும் என்றும் அதிக உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்டது.

ஆனால் அந்தொ பிரதேசத்தைச் சேர்ந்த தேசிய மக்கள் சக்தியைச் சார்ந்த உறுப்பினர்கள் அந்தச் சந்தை இறங்குதுறை என்றும், அங்கு மொத்த விற்பனை செய்ய இடமளிக்கப்பட வேண்டும் என்றும் எதிர்க் கருத்தை முன்வைத்து விவாதித்தனர்.

விவாதம் இரு தரப்பினருக்கும் இடையே பெரும் வாதமாக உருவாகி வெளி இடங்களில் இருக்கும் சந்தைகளை மேற்கோள் காட்டி விவாதிக்கும் போது உறுப்பினர் கருணாகரன் நாவலன், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரான லோகேந்திரன் இதயதீபனை நோக்கி சந்தை வருவாய் தொடர்பான உண்மை நிலை தெரிந்தும் “கற்றுக்குட்டித்தனமாக” சபையின் வருவாயை தடுக்க முயற்சிக்க வேண்டாம் என்று கருத்துக் கூறியிருந்தார்.

இந்தச் சொல்லாடலால் கோபமுற்ற உறுப்பினர் இதயதீபன்,

நாவலனை நோக்கி, “விகிதாசார உறுப்பினராக இருந்துகொண்டு நேரடியாக வெற்றிபெற்ற எம்மை நோக்கி இவ்வாறு கருத்துக் கூறவேண்டாம்” என விகிதாசார உறுப்பினர்களை கொச்சைப்படுத்தும் வகையில் சொல்லாடல் செய்திருந்தார்.

இதையடுத்து சபையின் 22 உறுப்பினர்களில் 10 விகிதாசார உறுப்பினர்களும் இந்தச் சொல்லாடல் தமக்கு மனச் சங்கடத்தை ஏற்படுத்துவதாகவும், அந்தச் சொல்லாடல் கௌவாங்கப்பட்டு, சம்பந்தப்பட்ட உறுப்பினர் பகிரங்க மன்னிப்பு கோரவேண்டும் என கோரி சபையில் இருந்து வெளியேற முயற்சித்தனர்.

இதனால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டதை அடுத்து சபையின் அமர்வை தவிசளர் 5 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கின்றார் எனக் கூறி வெளியேறினார்.

ஒத்திவைப்பின் பின் சபை மீண்டும் கூடியபோது, இதே விடயம் விவாதிக்கபட்டு சன்பந்தப்பட்ட உறுப்பினர்கள் இருவரும் தத்தமது கருத்தை பதிவுசெய்து பகிரங்க மன்னிப்புக் கோரினர். அத்துடன் மூன்றாவது நபராக இடையீடு செய்து சபையின் நடவடிக்கைக்கு இடையூறு செய்தமைக்காக உறுப்பினர் நடனசிகாமணியும் மன்னிப்புக் கோர வேண்டும் என தவிசாளர் வலியுறுத்தியதன் காரணமாக அவரும் மன்னிப்புக் கோரினார்.

இதையடுத்து சபை மீண்டும் இயல்புக்கு திரும்பியது.

# 13 வயது சிறுமியைக் கெடுத்த இளைஞருக்கு 20 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 7 வருட கடூழியம்

## சிறுமிக்கு நஷ்டஈடு வழங்கவும் மட்டு. மேல் நீதிமன்றம் தீர்ப்பு

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு பிரதேசம் ஒன்றில் கடந்த 2014 ஆம் ஆண்டு 13 வயது சிறுமி ஒருவரை பாலியல் துச்ப்பிரயோகத்துக்கு உட்படுத்திய இலைஞர் ஒருவருக்கு 20 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 7 வருட கடூழிய சிறைத் தண்டனையும் 20 ஆயிரம் ரூபா அபதாரமும் விதித்த மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறும் உத்தரவிட்டார்.

கடந்த 11 ஆம் திகதி இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு 13 வயது சிறமி ஒருவரை அப்பேது 22 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையார் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, விளக்கமறியல் வைக்கப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் அந்த நபருக்கு எதிராக இரு குற்றச்சாட்டுகளின் கீழ் பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர். மேல் நீதிமன்றத்தில் வழக்கு இடம்பெற்று வந்துள்ள நிலையில் கடந்த 11 ஆம் திகதி வியாழக்கிழமை வழக்கு விசாரணையின் போது சம்பந்தப்பட்ட நபருக்கு எதிராக 2 குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சாட்சிகள் மற்றும் தடயப் பொருள்கள், வைத்திய அறிக்கைகள் மூலம் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட நபருக்கு முதலாவது குற்றத்துக்கு 3 மாதகாலம் 10 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும், 10 ஆயிரம் ரூபா தண்டமும், இரண்டாவது குற்றத்திற்கு 20 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 7 வருட கடூழிய சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கவும் அந்தப் பணத்தை வழங்காத பட்சத்தில் சிறைத்தண்டனை எனவும் கட்டளையிட்டு நீதிபதி தீர்ப்பளித்தார்.

# நினைவுகளுடன் பார்த்தீபா..!

**தமிழ் மக்களுக்காக உண்ணா நோன்பு இருந்து தனது உயிரை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு இக் கவிதை பிரசுரிக்கப்படுகிறது.**



ஊரெழு பெற்றெடுத்த எம்மினத்தின்
தவம் புதல்வன் தமிழ் இனத்திற்காய்
பன்னிரு நாள்கள் பசித்திருந்து
பாரத தேசத்தின் முகத்திரையை
கிழித்தாய் பார்த்தீபா..!

ஈழத் தமிழர்கள் கண்கள் சிவந்ததே
அமைதி காக்க வந்த படை
பொருந்தா செயற்பாடு கண்டு
அகிம்சைப் போர் தொடுத்தாய்
வீரப்புதல்வன் பார்த்தீபா..!

தமிழினம் மீது கொண்ட பற்றால்
பசிப்புயலை வயிற்றில் அடக்கி
உலகமே பார்த்திருக்க படிப்படியாய்
உயிர்த்துடிப்பே அடங்கிப்போனதே
இனத்திற்காய் பார்த்தீபா..!

பார்த்திருந்தோம் காத்திருந்தோம்
காந்திய தேசம் ஐந்தம்சக் கோரிக்கையை
நிறைவேற்றும் என்று – ஆனால்
மக்கள் விழிகளை பெருவெள்ளமாக்கி
விடைபெற்றான் பார்த்தீபா..!

தியாக மகனின் அகம் நிறைந்த
நினைவுகள் நிஜங்களாய் நிழலாட
தலைமகன் சிரம் தாழ்த்தி ஆண்டுகள்
முப்பத்தெட்டு கடந்தும் உன்
நினைவுகளுடன் பார்த்தீபா..!

இன்னாளில் தியாகிக்கான
உயர்வான வணங்குதலோடு
உரிமைக்காய் உணர்வு கொள்வோம்
இலட்சிய கனவுக்காய்
ஒன்றாவோம் பார்த்தீபா...!



**மகேஸ்வரன் சுமன்ராஜ்**

# வவுனியாவில் சைக்கிள்களுக்கு ஒளிரூட்டும் ஸ்டிக்கர் ஒட்டல்



**(கி.வசந்தன்)**

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள்களின் சைக்கிள்களுக்கு ஒளிரூட்டும் ஸ்டிக்கர் ஒட்டும் செயற்பாடு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினால் நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அண்மைக்காலமாக வவுனியாவில் இடம்பெற்று வரும் விபத்துக்களைக் குறைக்கும் நோக்கில் இடம்பெற்ற இந்த நடவடிக்கையில் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை தவிசாளர் பா.பாலேந்திரன் மற்றும் சபை உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# இன்றைய ராசி பலன்கள் -18.09.2025




திறமையான முறையில் செயலாற்ற உங்களுக்கு பொறுமையும் உறுதியும் தேவை. பணி செய்வதற்கான திறமை உங்களிடம் காணப்படும் போதிலும் சிறந்த திட்டமிடல் இல்லாத காரணத்தால் அதனை நீங்கள் வெளிப்படுத்த இயலாது. எனவே கவன மாக பணியாற்ற வேண்டும்.

குடும்பத்துடன் அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசியம்.குடும்பத்தின் அமைதி சூழலை கெடுக்கும் வகையில் வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் குடும்ப உறுப்பினர்களின் உடல் நலத்திற்காக பணத்தை செலவு செய்ய நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உடல் நலத் தில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.




ஒரு சாதகமான நாள் உங்கள் முன் இருக்கின்றது. இன்று அமைதியான மனநிலையுடன் காணப்படுவதால் முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள். இன்று மாற்றங்கள் ஏற்படலாம். அது உங்களுக்கு நன்மையை அளிக்கும்.

இன்று பணிச்சுமை உங்களுக்கு மனஅழுத்தத்தை உண்டாக்கும். உங்கள் பணியின் தரம் குறைவாக இருக்கும்.

குடும்பத்தில் நல்லுறவு காணப்படும். குடும்பத்தாருடன் இனிமையாகப் பேசி பழகுவீர்கள்.

பணம் அதிகமாக காணப்படும். பயனுள்ள நோக் கங்களுக்காக பணத்தை செலவுசெய்வீர்கள்.

மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.தியானம் மேற்கொள்வது உங்களுக்கு மிகவும் நல்லது.




இன்று சௌகரியங்கள் குறைந்து காணப்படும். இன்று சில பொறுப்பு களை உங்களால் செய்ய முடியாமல் போகலாம்.

நீங்கள் பணியில் பிரகாசிப்பீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரி களால் பாராட்டப்படும்.

உணர்ச்சிவசப்படுவதன் காரணமாக தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கும். எனவே நல்லு றவை தக்க வைக்க கவனமாக இருக்க வேண்டும்.

பணஇழப்பிற்கு வாய்ப்பிருப்பதால் பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனமாக இருங் கள். தொண்டை வலி அல்லது கண்களில் எரிச்சல் ஏற்படலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

உங்கள் பணிகளில் தாமதம் ஏற்படும். பணிகள் சுமுகமாக நடைபெற நீங்கள் மிகுந்த கவனத்துடன் செயல்படவேண்டும்.

குடும்ப வட்டாரத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படும். விருந்தினர்களின் வருகை உற்சாகத்தைத் தரும்.

இன்று பணத்தை சேமிப்பதற்கும் முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கும் உகந்த நாள்.ஸ்திரமான நாளாக அமையும்.

இன்றைய நாள் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும். நீங்கள் ஆற்றலுடன் காணப்படு வீர்கள்.




இன்று அர்ப்பணிப்புடன் செயல்படு வீர்கள் உங்கள் நலன் பெருகும். இன்று பயணங்கள் காணப்படும்.

இன்று பணிச்சூழல் நன்றாக இருக்கும். மேலதிகாரிகள் உங்கள் திறமைகளை மதிப்பிடுவார்கள்.

இன்றைய தினம் காதலுக்கு உகந்த நாள் அல்ல. நீங்கள் மகிழ்ச்சியைத் தேடுவீர்கள்.

இன்று பண இழப்பிற்கு வாய்ப்பு உள்ளது. அதனால் சில ஏமாற்றங்களை சந்திக்க நேரும். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். சளி இருமல் போன்ற உபாதைகளுக்கு ஆளாக நேரலாம்.




இன்று உங்கள் எண்ணங்கள் ஈடேறும். இன்று அதிர்ஷ்டங்களை சந்திப்பீர்கள்.

பணியின் மீதான உங்கள் அர்ப் பணிப்பு காரணமாக உங்கள் மேலதி காரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். உங்களின் சிறந்த பணி காரணமாக பதவி உயர் விற்கான வாய்ப்பு உள்ளது.

பெரியவர்களிடமிருந்து இன்று அறிவுரை ஒன்றை கேட்க நேரும். நல்லுறவிற்கு அது பயனளிக்கும். குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும்.

இன்று நிதி வளர்ச்சி அபாரமாக இருக்கும். ஆன்மீக நோக்கங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள். ஆரோக்கியம் மிகச் சிறப்பாக இருக் கும்.




இன்று உங்கள் செயல்களில் கவனம் தேவை.

உங்கள் சகபணியாளர்கள் மற்றும் கீழ்பணிபுரிபவர்களின் ஆதரவு உங்க ளுக்கு நம்பிக்கை அளிக்கும் மற்றும் நற்பெயர் கிடைக்கும்.

குடும்ப அங்கத்தினர்களிடம் நல்ல புரிந்து ணர்வை ஏற்படுத்த வேண்டும். மோதல்களுக்கு வாய்ப்பு உள்ளது.

பணத்தை கையாள்வதில் கவனம் தேவை. அலட்சியமாக இருந்தால் பணஇழப்பு ஏற்படும்.

ஆரோக்கியம் குறைந்து காணப்படும். உங்கள் உண வில் கவனம் செலுத்துங்கள். குளிர்ச்சியான உணவு களை தவிர்த்துவிடுங்கள்.




இன்றையநாள் சமநிலையுடன் காணப்படும். உங்கள் அணுகுமுறை மூலம் நீங்கள் புதிய தொடர்புகளை பெறுவீர்கள்.

இன்றை பணியின் மூலம் நீங்கள் நற்பலன்களைப் பெறுவீர்கள். இது உங்கள் தகுதியை நிரூபித்துக் காட்டும்.

உறவில் அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படும். நண்பர்கள் உங்களுக்கு நல்லாதரவு தருவார்கள்.

இன்று நிதிவளர்ச்சி நன்றாக இருக்கும். உங்கள் நண்பர்களின் பிறந்த நாள் போன்ற விசேஷங்க ளுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் காணப்படு வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.09.2025




இன்றைய நாளில் எதிர்பாராத மாற்றங்கள நிகழும். முயற்சிகளை சார்ந்து செயல்படுவது நல்லது.

பணியிடத்தில் நற்பெயரைப்பெறு வீர்கள். விரும்பி பணியாற்றுவீர்கள்.

குடும்பத்தாருடன் நல்லுறவு பரா மரிப்பதற்கு உகந்த நாள். காதல் ஜோடிகள் இன்று பரஸ்பர ஒற்றுமையுடன் இருப்பார்கள்.

எதிர்பாராத வகையில் பணவரவு காணப்படும். பூர்வீ கச் சொத்து, காப்பீடு அல்லது லாட்டரி மூலம் பணம் கிடைக்கலாம்.

இன்றைய நாள் நல்ல ஆரோக்கியத்தை நீங்கள் அனுபவிப்பதற்கு உதவியாக இருக்கும். நீங்கள் கவ னிக்க வேண்டிய ஒரே விஷயம்– நீங்கள் உண்ணும் உணவு முறைகள்




இன்றைய நாளை சாதகமாக் கிக் கொள்ள நீங்கள் மிகவும் முயற்சி எடுப்பீர்கள். உங்கள் மனது அமைதியாக இருக்கும். உங்கள் இலக்கில் கவனம் செலுத்த இயலும்.

பணிநிமித்தமான பயணங்கள் ஏற்படும். உங்கள் பொறுப்புகளை முறையாக ஆற்று வீர்கள்.

நல்ல சுமுகமான உறவுமுறை காணப்படும். உறவுப் பிணைப்பின் மதிப்பை நீங்கள் உணர்வீர்கள்.

குடும்பத்தில் விசேஷங்கள் நடக்க வாய்ப்பு உள்ளது. அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள். அது உங்க ளுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

உங்கள் அமைதியான மனநிலை காரணமாக மிகவும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று அன்பும் ஆர்வமும் நிறைந் திருக்கும். நல்ல பாடல்களைக் கேட்டு மகிழுங்கள். விளையாட்டில் நேரத்தை கழியுங்கள்.

பணியிடச் சூழல் சுமுகமாக இருக் காது. அனுசரித்து நடந்து கொண்டால் உங்கள் பணிகள் பாதிக்காது.

காதலுக்கு உகந்த நாள்.காதல் ஜோடிகள் உறவில் ஒற்றுமை கண்டு மகிழ்வார்கள்.

நிதி விஷயங்களில் வளர்ச்சி காணப்படும்.பங்குச் சந்தையில் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் நல்ல லாபம் பெறுவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். ஆரோக் கியக் குறைபாடுகள் காணப்படாது.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். சுய வளர்ச்சிக்காக தொடர்ந்து முயன்றால் இன்று வெற்றி கரமான நாளாக ஆக்கலாம்.

பணியில் பலன்கள் கலந்து காணப்படும். ஏற்ற இறக்கங்கள் காணப்படும். மேலதிகாரிகள் மற்றும் சகபணி யாளர்களுடன் உறவாடும் பொழுது கவனமுடன் இருக்க வேண்டும்.

குழந்தைகளின் முன்னேற்றமும் வளர்ச்சியும் உங்க ளுக்கு மகிழ்ச்சி அளிக்கும். உடன்பிறந்தோரின் ஆதரவு கிடைப்பதற்கு சாத்தியம் உள்ளது.

இன்று நிதிவளர்ச்சிக்கு உகந்த நாள். இன்று நிதி சம்பந்தமாக முக்கியமான முடிவுகளை எடுப்பது பயனுள்ள தாக இருக்கும். இன்று சிறந்த ஆரோக்கியத்தின் காரண மாக மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.



# யாழ். கோட்டையைச் சூழ எல்லைக்கல் நடுவதை உடன் நிறுத்தும்படி யாழ் மாநகர முதல்வர் பணிப்பு

## தொல்லியல் திணைக்களத்துக்கு எழுத்தில் அறிவுறுத்தல்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் கோட்டையைச் சூழ வுள்ள பிரதேசத்தில் வீதிப் போக்கு வரத்தை கருத்தில்கொள்ளாது இடம் பெறும் எல்லைக் கல் நாட்டலை உடன் நிறுத்துமாறு தொல்லியல் திணைக் களத்திற்கு மாநகர முதல்வர் வி.மதிவதனி எழுத்தில் உத்தரவிட்டுள்ளார்.

மாநகர சபை எல்லைப்பரப்பில் காணப்படும் தொல்லியல் சின்னங்க ளில் ஒன்றான கோட்டைப் பகுதியை பாதுகாக்கும் நோக்கில் நான்கு புறமும் எல்லைக் கற்கள் நாட்டப்படுகின்றன.

இவ்வாறு நாட்டும் கற்கள் அதிக மொத்தமாக காணப்படுவது மட்டு மன்றி வீதி ஒதுக்கப் பிரதேசம் எவை யும் கருத்தில்கொள்ளாது போக்குவரத் திற்கு இடையூறாக வீதி விபத்து ஏற்படும் வகையில் பணிகள் இடம்பெறுவதை அவ தானிக்க முடிகின்றது. எனவே குறித்த பணிகளை உடன் நிறுத்தி சபையின் வழி காட்டலுடன் சம்மதத்தைப் பெற்ற பின்பு எல்லையிடுமாறு எழுத்தில் அறிவித்தல் மாநகர முதல்வரால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.